# மாலை தீப்பொறி

MALAE THEEPORI



திருமாவளவன் நேர்காணல்

2023 டிசம்பர் 16-31 தொகுதி 22 இதழ் 9

விலை ரூ.10 ஆண்டு சந்தா ரூ.200

## டிசம்பர் 18: தோழர் விஎம்-ன் 25வது நினைவு நாள்-பாட்னா





# 2023 டிசம்பர் 18 - உறுதிமொழி!

தோழர் விஎம்மின் 25 வது ஆண்டு நினைவுநாளில், நமது மாபெரும் தியாகிகள், மறைந்த தலைவர்களது மாபெரும் புரட்சிகர லட்சியத்திற்கு இகக(மாலெ) தன்னை மறுஅர்ப்பணிப்பு செய்துகொள்கிறது, இன்றைய சவால்மிக்க சூழலில் தோழர் விஎம் மினது புரட்சிகர மரபை முன்னெடுத்துச்செல்ல உறுதி ஏற்கிறது.

தோழர் விஎம், 1970 களின் துவக்க காலத்தில் கட்சியின் மீது ஏவப்பட்ட அடக்குமுறை, கட்சி சந்தித்த பின்னடைவுக்குப் பிந்தைய கட்சி மறுகட்டமைப்பை தலைமையேற்று வழிநடத்தினார். தோழர் சிஎம் மினது கடைசி கட்டுரையில், கட்சியை உயிர்ப்புடன் வைத்திருக்க வெகுமக்களுடன் நெருக்கமான பிணைப்பைக் கொண்டிருங்கள், அவர்களது நலனை உச்சபட்ச கடமையாகக் கொண்டிருங்கள் என்று சொன்ன அந்த சொற்கள் கட்சியை மீட்டெடுக்கும் மறுகட்டமைப்பு செய்யும் இந்த இயக்கப்போக்கிற்கு உத்வேகமூட்டியது. மக்களுடனான கட்சியின் உயிரோட்டமான பிணைப்பு, மக்களைச் சார்ந்திருப்பது, பலதரப்பட்ட போராட்டங்களில் மக்களின் துணிச்சல்மிக்க அணிதிரட்டலில் கட்சியின் தலைமைப்பங்கு இவையே கட்சியின் வளர்ச்சிக்கு திறவுகோலாக விளங்கின. கட்சியின் வெகுமக்கள் நடைமுறை, வெகுமக்கள் பண்பை வலுப்படுத்தும் பொருட்டு நமது முயற்சிகளை இரட்டிப்பாக்கிட உறுதிகொள்கிறோம்.

தோழர் வி எம் தலைமையில், கட்சி தனது சுதந்திர பாத்திரத்தை, முன்முயற்சியை, அடையாளத்தை வலுப்படுத்தி வந்த அதேவேளை, தனிநபர் முதல், அமைப்புகள் வரையிலான ஒரு முழுவரிசை கூட்டாளிகளைத் தேடும் செயல்மிக்க அய்க்கிய முன்னணி கொள்கையையும் கட்சி வளர்த்தெடுத்தது. எல்லா வழிகளிலும் கட்சியின் சுதந்திரமான வலுவையும் பாத்திரத்தையும் வலுப்படுத்தும் அதேபோது, கட்சியின் இந்த அய்க்கிய முன்னணி கொள்கையை வளர்க்கவும் செயல்படுத்தவுமான கட்சியின் திறனை உயர்த்தியாக வேண்டும்.

கட்சி தனது திட்டங்கள், கொள்கைகளை வளர்ப்பதிலும் பல அரங்குகளிலும் முன்னேறி வருவதிலுமான அதன் வெற்றி, கட்சியின் அமைப்பு வலுவையும் கருத்தியல் தெளிவையும் சார்ந்துள்ளது. சோவியத் யூனியன் சரிவை அடுத்து பல கம்யூனிஸ்ட் கட்சிகள் தங்களைத் தாங்களே கலைத்துக் கொண்டிருந்தபோது, தோழர் வி எம் தலைமையின் கீழ், கட்சி புரட்சிகர மார்க்சியத்தை உயர்த்திப்பிடித்தது. அதுமட்டுமின்றி, ஒரே சமயத்தில் கட்சி, அதன் அமைப்பு கட்டமைப்பு, ஜனநாயக செயல்பாடு, கூட்டுத்தலைமையை வளர்த்தெடுத்தது, உறுதிப்படுத்தியது.

மிகமுக்கியமான 2024 தேர்தல்களுக்கும் வளர்ந்துவரும் பாசிச தாக்குதலுக்கு எதிரான தீர்மானகரமான எதிர்ப்புக்கும் ஆயத்தமாகிக்கொண்டிருக்கும் போது, நாம் மார்க்சியம்லெனினியம் மாசேதுங் சிந்தனை அடித்தளத்தின் மீது உறுதியாக நிற்கவேண்டும்; நமது அமைப்புக் கட்டமைப்பையும் செயல்பாட்டுமுறையையும் வலுப்படுத்தியாக வேண்டும். இந்த ஆண்டு, பிப்ரவரியில் பாட்னாவில் வெற்றிகரமாக கட்சிக் காங்கிரஸ் நிறைவடைந்ததைத் தொடர்ந்து நமது வேலைப்பகுதிகள் அனைத்திலும் கட்சிக் கிளைகளையும் உள்ளூர் கமிட்டிகளையும் மறுசீரமைப்பு செய்திட தீர்மானித்தோம்.

செயல்படுகிற கிளைகள், உள்ளூர் கமிட்டிகள் இல்லாமல் நாம், களமட்டத்தில் அமைப்பாக்கப்பட்ட இருத்தலை உண்மையில் கொண்டிருக்க முடியாது; அதிலும் குறிப்பாக உச்சமடைந்துவரும் பாசிச தாக்குதல் சூழ்நிலையில், உள்ளூர் அமைப்புகள் இல்லாமலிருப்பது பிரதானமான வலுவின்மையாகும். எனவே களத்தில் துடிப்பும் இயங்காற்றலும் கொண்ட அமைப்புக் கட்டமைப்பை உறுதிசெய்வதற்கான அழுத்தம் தொடரவேண்டும், அது நமது கட்சியை வரையறுத்துக்காட்டுகிற இயல்பாக ஆக்கப்பட வேண்டும். இந்த ஆண்டு உறுதி ஏற்பு நாளில், நமது ஒட்டுமொத்த அமைப்பையும் உறுதியாக ஒன்றுபடுத்தப்பட்ட, சண்டைக்கு எப்போதும் ஆயத்தமாக இருக்கும் போராடும் சக்தியாக ஆற்றலூட்ட உறுதியேற்போம்.

தோழர் விஎம் க்கு செவ்வணக்கம்!

நமது தியாகிகள், மறைந்த தலைவர்களுக்கு செவ்வணக்கம்!

இகக(மாலெ) நீடுழி வாழ்க!

பாசிசத்தை தோற்கடிப்போம், மக்கள் உரிமைகளை பாதுகாப்போம்!

போராட ஒன்றுபடுவோம்! வெற்றிபெற போராடுவோம்!

2023 டிசம்பர் 16-31

மாலை தீப்பொறி

இருவார இதழ்

தொகுதி 22 இதழ் 9


உள்ளே


| | |
|---|---|
| தோழர் திருமாவளவன் பேட்டி | 4 |
| தோழர் வினோத் மிஸ்ரா | 8 |
| தேர்தல்கள் தரும் பாடங்கள் | 12 |
| நாடாளுமன்றத்தில் புகைப் புட்டிகள் | 20 |



**முதன்மை ஆசிரியர்**

**வீ.சங்கர்**

**ஆசிரியர்**

**ஜி.ரமேஷ்**

**ஆசிரியர்குழு**

**பாலசுந்தரம்**

**பழ.ஆசைத்தம்பி**

**அ.சந்திரமோகன்**

**கே.ஜி.தேசிகன்**

**மேலாளர்**

**சொ.இரணியப்பன்**

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) தமிழ்நாடு மாநிலக்கமிட்டியின் அரசியல் ஏடு**

1/10, 11ஆவது தெரு,
கருணாநிதி நகர்,
அயனாவரம், சென்னை - 23

நிர்வாக அலுவலகம்
3/254பி, ஜீவா தெரு,
வண்டலூர்
சென்னை - 600048

தொலைபேசி: 9443507067
9840340741

malaetheepori@gmail.com
www.tamilnadu.cpiml.net
cpimlthamilnadu.blogspot.com




**தலையங்கம்**

# ஆள்பவர்கள் பாடம் கற்றுக் கொள்வார்களா?

2023 டிசம்பர் 3 அன்று சென்னையில் அதிகாலை 3 மணிக்கு ஆரம்பித்த மழை தொடர்ச்சியாக இடைவிடாமல் பெய்து ஒட்டு மொத்த சென்னையையும் மூழ்கடித்தது. முதல்வர் ஸ்டாலின், 2015ல் வந்த வெள்ளம் செயற்கை வெள்ளம். ஆனால், 2023ல் வந்த வெள்ளம் இயற்கை வெள்ளம் என்றார். உண்மைதான். எதிர்பாராத அளவில் ஒரு மாதத்தில் பெய்ய வேண்டிய மழை ஒரே நாளில் 26 செ.மீ அளவிற்குக் கொட்டித் தீர்த்தது. எப்படிப்பட்ட மழை, வெள்ளம் வந்தாலும் சமாளிப்போம் என்று மழைக்கு முன்பு சொன்னவர்கள், மழைக்குப் பின்பு மாற்றிப் பேசினர். நாங்கள் இதை எதிர்பார்க்கவில்லை என்றார்கள். வேளச்சேரி எம்எல்ஏ, அவ்வளவுதான் எங்களால் முடிந்ததைச் செய்து விட்டோம், கடல் வாட்டரை ரிசீவ் பண்ணவில்லை என்றால் நாங்க என்ன செய்ய முடியும் என்று கொஞ்சம் இறுமாப்புடன்தான் பேசினார். இது போல் பல ஆளுங்கட்சி நிர்வாகிகள் பேசியதைப் பார்க்க முடிந்தது. இந்த அளவிற்கு மழை எதிர்பார்க்கப்படவில்லை என்றாலும் ஏரிகள் நிறைந்த நீர்த் தேக்கங்களின் நகரமான சென்னையில், முன்னெச்சரிக்கை நடவடிக்கையில் மெத்தனம் தெரிந்தது. அது மட்டுமல்ல, எந்தவொரு வரைமுறையும் வரைபடமும் இன்றி, திட்டமில்லாமல், இஷ்டத்திற்கு ஏரிகள் உள்ளிட்ட நீர்ப்பிடிப்பு பகுதிகளில், பல்கலைக் கழகங்கள், பஸ் ஸ்டாண்டுகள், கல்லூரிகள், அரசு அலுவலகங்கள் என கட்டுவதற்கு அனுமதி கொடுத்தது மட்டுமின்றி, அடுக்கு மாடிக் கட்டடங்களையும் குடியிருப்புகளையும் கட்ட வைத்து, கட்டிக் கொண்டு கல்லா கட்டியதன் விளைவு வெள்ளத்தைத் தாக்குப் பிடிக்க முடியாமல் திக்கித் திணறியதற்குக் காரணம் ஆகும். அதேபோல், டிசம்பர் 17 அதிகாலை ஆரம்பித்த மழை, நெல்லை, தூத்துக்குடி, தென்காசி, கன்னியாகுமரி மாவட்டங்களில் மக்களின் வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுள்ளது. இந்தத் தலைமுறையினர் இதுவரை கண்டிராத அளவிற்கு 30 செ.மீ., 36 செ.மீ., 39 செ.மீ என மாசக் கணக்கில் பெய்ய வேண்டிய மழை மணிக்கணக்கில் பெய்துவிட்டது பேய் மழை. நீர்த் தேக்கப் பகுதிகளான பாபநாசம், மணிமுத்தார் உள்ளிட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் இடைவிடாத மழை, ஊர்களுக்குள்ளும் இடைவிடாமல் 24 மணி நேர மழை. ஆற்றின் வெள்ளமும் ரோட்டின் மழைத் தண்ணீரும் ஒன்று சேர்ந்து குடியிருப்புகளுக்குள்ளே பாய்ந்துவிட்டன. இதுவரை இல்லாத வகையில் திருநெல்வேலி ஊருக்குள்ளே படகுகள் வர வேண்டிய நிலை. இந்த அளவிற்கு எதிர்பார்க்கவில்லைதான். ஆனால், தென் மாவட்டங்களிலும் கால்வாய்களை, வாய்க்கால்களைக் காணவில்லை. ஏரி குளங்கள் தூர்வாரப் படவில்லை. 50 அடி வாய்க்கால்கள் எல்லாம் அரை அடி சாக்கடைகளாக மாற்றப்பட்டுவிட்டன. மழைத் தண்ணீர் வடிய வழியில்லை. கட்டடங்கள் ஆக்கிரமித்துக் கொண்டன. வயல் வெளியும் ஆற்றங்கரைகளும் குடியிருப்புகளாக மாற்றப்பட்டு விட்டன. கமிஷன் கொடுத்து காண்ட்ராக்ட் எடுத்து போடப்படும் ரோடுகள் மேலும் மேலும் உயர்ந்து கொண்டே போய், ரோட்டுத் தண்ணீர் வீட்டிற்குள் பாயும் நிலை. இந்த நிலைக்கு எல்லாம் காரண கர்த்தாக்கள் ஆண்ட, ஆண்டு கொண்டிருக்கும் ஆட்சியாளர்களும் அவர்களின் கீழ் உள்ள அதிகாரிகளும்தான். திருநெல்வேலியை பொலிவுறு நகரமாக மாற்றுவதாகச் சொல்லிக் கொண்டு, புதிதாகக் கட்டப்பட்டுள்ள நெல்லை சந்திப்பு பேருந்து நிலையத்தைச் சுற்றி 15 அடி உயரத்திற்கு மேல் தண்ணீர் ஓடுகிறது. 92ல் இருந்து பாடம் பெறவில்லை. இந்த இடம் ஒரு காலத்தில் ஆற்றின் பாதையாக இருந்தது. அதனால்தான், தோண்டத் தோண்ட பொன் போன்ற மணல்கள் வந்தன. அதை எடுத்துக் கொண்டு போய் அயல் நாட்டில் விற்று காசாக்குவதில் காட்டிய அக்கறையை, உரிய வடிகால் திட்டத்துடன் முறையாக பேருந்து நிலையத்தைக் கட்டுவதில் காட்டவில்லை. கூடங்குளம் அணுஉலையைச் சுற்றி வெள்ளக்காடு. இந்த நிலையில் கதிரியக்கம் ஏற்பட்டால், தென் மாவட்டங்கள் சுடுகாடு. தொடர் மழை வெள்ளத்தால், வீடுகள் இடிந்து உயிர்ப்பலிகள். வெள்ளத்தில் பலரைக் காணவில்லை என்றும் செய்திகள் வருகின்றன. நீர்த் தேக்கங்களைத் திறப்பதற்கு முன்பு சரியான முறையில் எச்சரிக்கைகள் செய்யப்படவில்லை. இப்படி சுற்றுச் சூழலைப் பற்றி கொஞ்சம் கூட அக்கறை காட்டாத ஆட்சியாளர்களால், இந்த பேராபத்து மீண்டும் மீண்டும் நிகழும். இது உடனடியாகச் சரி செய்யப்பட வேண்டும். ❑

# நாங்களும் இடதுசாரிகள்தான்

## விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தோழர் தொல்.திருமாவளவன் அவர்களுடன் நேர்காணல்

**நவம்பர் புரட்சி தினத்தை முன்னிட்டு மாலெ தீப்பொறி பத்திரிகை ஆசிரியர் ஜி.ரமேஷ் மற்றும் தீப்பொறி பத்திரிகைக் குழுவினர் தோழர் பாலசுந்தரம், தோழர் ரஞ்சனி, தோழர் ஜோஸ்வா ஆகியோர் சந்தித்துப் பேசிய உரையாடலின் முதல் பகுதி**



### விடுதலை சிறுத்தைகள் கட்சியின் 41 ஆண்டு பயணத்தை திரும்பிப் பார்க்கும்போது எப்படி உணர்கிறீர்கள்?

விடுதலை சிறுத்தைகள் கட்சி, நான் தலைமை ஏற்றபிறகு, தொடக்கத்தில் ஒரு சமூக நீதிக்கான இயக்கமாக, சமூக இயக்கமாகவே பயணத்தைத் தொடங்கியது.

தலித் பாந்தர் இயக்கம் 1972ல் மராட்டிய மண்ணிலே தொடங்கப் பெற்றது. அதன் தமிழ்நாடு கிளை 1982லே மாவீரன் மலைச்சாமி அவர்களின் தலைமையில் தொடங்கப் பெற்றது. சவிதா அம்மையார், ராம்தாஸ் அத்வாலே, வை. பாலசுந்தரம் போன்ற தலைவர்கள் பங்கேற்றுள்ளனர். நான் 1988 ஏப்ரலில் அரசு ஊழியராக மதுரைக்குச் செல்கிறேன். 1989ல் சட்டமன்றத் தேர்தல் அறிவிப்பு செய்யப் பட்ட காலத்தில், அண்ணன் மலைச்சாமி அவர்களின் நட்பு கிடைக்கிறது. 1989 மார்ச் அல்லது ஏப்ரலில் அவர் ஏற்பாடு செய்த ஓரிரு நிகழ்ச்சிகளில் நான் பங்கேற்றேன். 1989 செப்டம்பர் 14ல் அவர் உடல் நலிவுற்று காலமாகி விட்டார். ஒரு சில மாதங்களே அவரோடு பழகுவதற்கான வாய்ப்பு எனக்குக் கிட்டியதால் அந்த, இயக்கத்தைப் பற்றி அதிக விவரங்கள் அறிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கவில்லை. மராட்டிய மாநிலத் தொடர்பும் கிடைக்கவில்லை. அண்ணன் மலைச்சாமி அவர் களின் மறைவுக்குப் பிறகு, மேலூரைச் சேர்ந்த சில தோழர்கள் இந்த இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்த வேண்டும் என்று என்னிடத்திலே தோழமை உணர்வோடு ஒரு வேண்டுகோளை வைத்தார்கள்.

1989 டிசம்பரில், அண்ணன் மலைச்சாமி அவர்களுக்கு ஒரு நினைவேந்தல் கூட்டத்தை மதுரை தமுக்கம் மைதானத்தில் நடத்தினோம். அந்த கூட்டத்தில் தான், அதிகாரபூர்வமாக தலித் பாந்தர் இயக்கத்தை, தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டுமென ஒருமித்த குரலில் என்னிடத்திலே வேண்டுகோள் வைத்தார்கள். அப்போதுகூட அதற்கு நான் உடன்படவில்லை. ஏனென்றால் எனக்கு தலித் அரசியல் பற்றி விவரம் தெரியாது. அம்பேத்கரை தெரியும்; பெரியாரை தெரியும். ஆனால் தலித் பாந்தர் இயக்கம் பற்றி தலித் அரசியல் பற்றி தெரியா தென்பதால் ஒரு தயக்கம் இருந்தது. பிறகு, 1990 ஜனவரி 21 ஆம் தேதி மதுரை பயணியர் விடுதியில் தோழர்கள் ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினர். 20 அல்லது 30 பேர் பங்கேற்ற கூட்டத்தில் அந்த அமைப்பினுடைய மாநில அமைப்பாளராக என்னை பொறுப்பேற்கும்படி வலியுறுத்தினார்கள். தற்காலிக மாக உடன்பட்டேன். உங்களில் யாராவது ஒருவர் பொறுப்புக்கு தேர்வு செய்யப்பட்டால் விலகிக் கொள்கிறேன் என்றும் கூறினேன். ஏனென்றால் நான் அப்பொழுது ஒரு அரசு ஊழியராக, தடய அறிவியல் துறை ஊழியராக இருந்தேன். இப்படிதான், தலித் அரசியல் களத்தில் நான் அடியெடுத்து வைத்தேன். ’90களின் தொடக்கத்திலேயே இந்த இயக்கம் மதுரை



மாவட்டமெங்கும், குறிப்பாக மேலூர் வட்டாரத்தில் மிக வேகமாக பரவத் தொடங்கியது.

நான் அந்த காலத்தில் அதிகமாக ஈழத் தமிழர் பிரச்சனைகளில் ஈடுபாடு கொண்டிருந்தேன். விடுதலைப் புலிகளின் இயக்க முன்னணி தலைவர் களுடனும் எனக்கு நெருக்கம் இருந்தது. அந்த தாக்கத்தின் விளைவாக, ஒடுக்கப்பட்ட சிறுத்தைகள் என்ற பெயரில் இருந்த இயக்கத்தை விடுதலை சிறுத்தைகள் என மாற்றி அழைக்கத் தொடங்கினேன். பிறகு உத்தங்குடியில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில், இனி இந்த இயக்கம் 'விடுதலை சிறுத்தைகள் இயக்கம்' என்றே அழைக்கப்படும். தேர்தல் புறக்கணிப்பு இயக்கமாகவே செயல்படும். தேர்தல் அரசியலில் ஒருபோதும் ஈடுபடாது என்று நான் முன்மொழிந்ததை எல்லோரும் ஏற்றுக் கொண்டார்கள். அதன்படி விடுதலை சிறுத்தைகள் என்ற பெயரில் இயங்கத் தொடங்கினோம். இடதுசாரி இயக்கங்களோடும் குறிப்பாக மார்க்சிய லெனினிய இயக்கங்களோடு அவ்வப்போது ஒருங்கிணைந்து பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தோம். இப்படி ஒரு பத்தாண்டு காலம் தேர்தல் புறக்கணிப்பு அரசியலில் தீவிரமாகச் செயல்பட்டோம். அப்போதும் நான் அரசு ஊழியன்தான், திருமாவளவன் என்ற பெயரில்தான் இயங்கினேன். அரசு ஆவணங்களிலும் அரசியல் ஆவணங்களிலும் திருமாவளவன்தான்.

அதன் பிறகு எங்கள் இயக்கத்திற்கு பல்வேறு நெருக்கடிகள். குறிப்பாக விடுதலை புலிகளோடு தொடர்புபடுத்தி கடுமையான நெருக்கடிகள் வந்தன. தமிழ்நாட்டில் தலைமறைவாக இருந்த நக்சல்பாரி களைத் தேடும் முயற்சியில் க்யூ பிரிவு போலிசார் இறங்கினார்கள். அவர்களில் பலரும் விடுதலை சிறுத்தைகளிடம் அடைக்கலமாகி இருக்கிறார்கள் என்று க்யூ பிரிவு போலிசார் சந்தேகித்தார்கள். என்னையும் சந்தேகப்பட்டார்கள். அந்தச் சமயத்தில், மதுரை கோரிப்பாளையத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை நடத்தினோம். அந்தப் பொதுக்கூட்டமே க்யூ பிரிவு போலீஸ் எங்களை பின்தொடர்ந்து அச்சுறுத்துவதைக் கண்டித்து நடத்தப்பட்ட கூட்டம்தான். பொதுக்கூட்டத்தில், பேசிவிட்டு புதூர் நோக்கி நடந்து சென்று கொண்டிருந்தபோது, காவல்துறை எங்களை வழிமறித்தது. என்னையும் பரமக்குடியைச் சேர்ந்த நண்பர் பூ.சந்திரபோஸ் உள்ளிட்டவர்களையும் பள்ளத்தூர் போலீசார் பலவந்தமாக தூக்கிச் சென்றார்கள். நாங்கள் பள்ளத்தூர் காவல்நிலையத்தில் அடைக்கப் பட்டோம். இந்தச் சம்பவம், இளைஞர்கள் மத்தியில் பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. அய்யா பழ.நெடுமாறன், மருத்துவர் சேதுராமன், சிவகங்கை யைச் சேர்ந்த பி.அரப்பா, பாட்டாளி மக்கள் கட்சியைச் சார்ந்த, அன்றைக்கு மதுரை மாவட் டத்தின் பொறுப்பில் இருந்த தோழர்கள், புரட்சிக் கவிஞர் பேரவையைச் சார்ந்த தோழர்கள், சிபிஐ (எம்எல்) இயக்கத்தைச்சார்ந்த தோழர்கள், தமிழ்நாடு மார்க்சிஸ்ட் லெனினிஸ்ட் இன்னும் பல இயக்கங் கள், கண்டன ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றார்கள்.

பெரும் மக்கள் திரள் ஆர்ப்பாட்டங்கள், மறியல்கள், கலெக்டர் அலுவலகம் முற்றுகை எனப்பல போராட்டங்கள் வெடித்ததால் எங்களை விசாரிக்காமலேயே கொண்டுவந்து விட்டு விட்டார்கள். இப்படி, இந்த இயக்கம் வெளிச்சத்துக்கு வந்தது. பலருக்கும் அறிமுகமானது. அதன் பிறகு வட மாவட்டங்களுக்கும் பரவியது.

1992 சென்னகரம்பட்டி படுகொலை, 1997 மேலவளவு படுகொலை, சத்திரப்பட்டி அருகே, அருகே கடவூர் தீ வைப்புச் சம்பவம், அதே கால கட்டத்தில், மதுரையில் அம்பேத்கர் சிலை உடைப்பு, மேலவாசலில் துப்பாக்கிச் சூடு, அதில் ஒரு தம்பி பலியானார்; பந்தல்குடியில் வைக்கப்பட்டிருந்த அரை உருவ அம்பேத்கர் சிலையை உடைத்து, வைகை ஆற்று மணலில் புதைத்தார்கள். இப்படி, தலித் மக்களுக்கு எதிரான சாதி வெறியாட்டங்கள், வன்கொடுமைகள் தலைவிரித்தாடின. இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்த வன்முறைகளை எதிர்த்து, தலித்துகளுக்கெதிரான வன்கொடுமைகளைக் கண்டித்து, அங்குள்ள தலித் இயக்கங்கள், இடதுசாரி இயக்கங்களை ஒருங்கிணைந்து போராட்டங்கள் நடத்தினோம். அவ்வப்போது பேரணிகள், போராட்டங்கள் நடத்துவது என்று எங்களது பயணம் 1999 வரையுல் நீடித்தது.

1997 மேலவளவு படுகொலையைக் கண்டித்து சென்னையில் ஒரு மாபெரும் பேரணி நடந்தது. '95 ல் கடலூர் மாவட்டம், திட்டக்குடியில் கொடியேற்றுவதில் தகராறு ஏற்பட்டு மிகப்பெரிய வன்முறை வெறியாட்டம் நடந்தது, துப்பாக்கிச் சூட்டில் மூன்றுபேர் காயம் அடைந்தனர் ஏராளமான பேர் போலீஸ் தடியடியில் காயமானார்கள். ஏராளமானோர் பொய் வழக்குகளில் கைது செய்யப்பட்டார்கள். அது கடலூர் மாவட்டத்தில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு பத்தாண்டு காலம் போராட்டம், வழக்குகள், சிறை நெருக்கடிகள். இவற்றைக் கண்டிப்பதற்கான பேரணிகள், மாநாடுகள், கோரிக்கைப் பேரணிகள், மண்ணுரிமை கோரிக்கை என்ற பெயரிலே பேரணிகள், போராட்டங்கள் என்று எங்கள் பயணம் தொடர்ந்தது. 1999ல் ஏராளமான எங்கள் இயக்கத் தோழர்கள் குண்டர் தடுப்பு சட்டத்தில் கைது செய்யப்பட்டார்கள். குறிப்பாக கடலூர் மாவட் டத்தைச் சேர்ந்த முன்னணி தோழர்கள் பாண்டுரங்கன், பால்ராஜ், திருவள்ளுவன் போன்றோர் அடுத்தடுத்து இன்னும் பல தோழர்கள் குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையிலடைக்கப்பட்டார்கள்.

1997 மேலவளவு படுகொலைக்கு காரணம் உள்ளாட்சித் தேர்தல். உள்ளாட்சி தேர்தலில் யாரை ஆதரிப்பது? என்ற கேள்வி வந்தது. நாம் தேர்தலை ஏன் புறக்கணிக்கிறோம் என்ற கேள்வி எழுந்தது. ஒரு விவாதத்தை நடத்தினோம். தேர்தல் புறக்கணிப்பு என்பது ஒரு உத்தியே தவிர அது ஒரு கொள்கையாக இருக்க முடியாது. நாம் அம்பேத்கர் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறோம். அவர் எந்த இடத்திலும் தேர்தல் புறக்கணிப்பை வலியுறுத்தவில்லை. நாடாளுமன்ற ஜனநாயகத்தை பயன்படுத்தி ஆட்சி அதிகாரத்தைக் கைப்பற்றினால் இந்த மக்களை மீட்டெடுக்க முடியும் என்றே நம்பினார். ஆகவே, நாம் தேர்தல் புறக்கணிப்பைக் கைவிட வேண்டும். தேர்தல் புறக்கணிப்பால் எந்த பயனும் இல்லை. மக்கள் வாக்களிக்காமல் இல்லை. மக்கள் வாக்களிப்பார்கள் மேலவளவிலே அதுதான் நடந்தது. எனவேதான் வாக்களித்த மக்களுக்கு துணையாக இருப்பது என்பதுதான் அரசியல் களத்தில் பணியாற்றுவது என்பதை எங்கள் கடமை என்று நாங்கள் விரிவான விவாதத்தை பெரம்பலூரில் நடத்தினோம். அதைத் தொடர்ந்து, திருமாந்துறை, விழுப்புரம் என மூன்று அடுத்தடுத்து கூட்டங்கள் நடத்தி தேர்தல் பாதையில் பங்கேற்பது என்று முடிவுக்கு வந்தோம். 'கொண்ட கொள்கையில் உறுதியைக் காட்டுவோம்; தேவையெனில் கொள்கை சிதையாமல் உத்தியை மாற்றுவோம்' என்ற முழக்கத்தை முன்வைத்து தேர்தல் பாதையில் அடி எடுத்து வைத்தோம்.

குண்டர் சட்டத்தில் கைது செய்யப்பட்ட திருவள்ளுவனை கடலூர் நாடாளுமன்ற தொகுதி அல்லது சிதம்பரம் நாடாளுமன்ற தொகுதி வேட்பாளராக நிறுத்துவது என்று முடிவெடுத்தோம். இதை அறிந்து கொண்ட மூப்பனார், எங்களை அணுகி எங்களைச் சமாதானப்படுத்தி அவரது மூன்றாவது அணியில் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார். 1990ல் தேர்தலில் பங்கு பெற்றோம். இப்படித்தான் பத்தாண்டு கால சமூக இயக்கத்திலிருந்து அரசியல் கட்சியாக, தேர்தல் புறக்கணிப்பு இயக்கத்திலிருந்து தேர்தல் பங்கெடுப்பு இயக்கமாக அடி எடுத்து வைத்தோம். 2002ல் தேர்தலில் வெற்றி பெற்று நான் சட்டமன்ற உறுப்பினராக ஆனேன். இரண்டரை ஆண்டுகள் கழித்து அந்தப் பதவியை ராஜினாமா செய்தேன். அதுவரையிலும் விடுதலை சிறுத்தை கட்சிகள் ஒரு



பதிவு செய்யப்பட்ட கட்சியாக இல்லை. 2002ல் தான் விடுதலை சிறுத்தைகள் கட்சி என்ற பெயரிலே தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டது. இவ்வாறு தேர்தல் அரசியலில் 25 ஆண்டுகள் நின்று கொண்டிருக்கிறோம். தமிழ்நாட்டில் இடதுசாரிக ளோடும் திராவிட இயக்கங்களோடும் இணைந்து வலதுசாரி எதிர்ப்பில் தீவிரமாகக் களமாடி வருகிறோம்.

**ஒடுக்குமுறை, புறக்கணிப்பலிருந்து தமிழ் நாட்டு அரசியலில், தவிர்க்கமுடியாத அரசியல் சக்தியாக, வெற்றிகரமான ஜனநாயக அரசியல் இயக்கமாக விடுதலை சிறுத்தைகள் கட்சி, முன்வந்திருக்கிறது என்று கூறுகிறீர்கள். ஆனால், இந்தியாவின் மற்ற பல பகுதிகளில் தலித் அமைப்புகள் அப்படி முன்வரவில்லை; தேக்கத்தில் இருக்கின்றன. இந்த வேறுபாட்டை எப்படிப் பார்க்கிறீர்கள்?**

நீண்ட காலமாகவே, கருத்தியல் அடிப்படை யிலான பரப்புரையோ, விழிப்புணர்வோ இல்லாமல் சாதி பார்த்து அரசியல் செய்வதை மட்டும் முன்னெடுத்துப் போனதன் விளைவாக அது ஒரு கட்டத்திற்கு மேல் போக முடியாமல் தேங்கி நிற்கிறது. பல மாநிலங்களில், தலித் இயக்கங்களின் போக்கு குறிப்பிட்ட ஒரு கட்டத்திற்கு மேல் முட்டுச் சந்தில் போய் நின்று விடுகிறது. அதற்குக் காரணம் பலதரப்பட்ட மக்களின் பிரச்சனைகளையும் அவர்கள் கவனத்தில் கொள்ளாமல் போனதுதான். உதாரணத்திற்கு சொன்னால் மொழி வழி தேசிய இன இயக்கத்தில் தலித் அமைப்புகள் ஈடுபடுவதில்லை. மொழி உரிமைகளைப் பற்றி பேசுவதில்லை. மாநில உரிமைகளைப் பற்றி பேசுவதில்லை. கூட்டாட்சி பற்றி பேசுவதில்லை. விவசாயிகள் பிரச்சனை களைப் பற்றி பேசுவதில்லை ஏகாதிபத்தியத்தின் தாக்கங்கள் பற்றிப்பேசுவதில்லை. கார்ப்பரேட்டின் கொள்ளைகளைப் பற்றி பேசுவதில்லை. பெண்க ளுக்கு எதிரான வன்கொடுமைகளைப் பற்றி பேசுவதில்லை. இவ்வளவு தளங்களில் பேசாமல் நாமெல்லாம் எஸ்.சி, அம்பேத்கர் தலைமையில் ஒன்றிணைய வேண்டும்; நமக்கு எதிரான கொடுமைகளை எதிர்த்துப் போராட வேண்டும் என்கிற ஒரு பரிமாண அரசியலில் தேங்கிவிட்டன. நீண்ட காலமாக விளிம்பு நிலை மக்களுக்கான இயக்கம் என்ற புரிதலோடு எல்லா தளங்களிலும் நம் பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற புரிதலோடு இயங்கும்போது நமக்கான செயல்பாட்டு வெளி இருந்து கொண்டே இருக்கும். தேக்கம் ஏற்படாது. ஒரு இடத்துல தேக்கம் ஏற்படும் போது ஒரு அரசியல் நெருக்கடி வந்தால் செயல் இழந்து விடுவது என்பதாக உள்ளது. என்னுடைய அனுபவத்தி லிருந்து சொல்கிறேன் விடுதலை சிறுத்தைகள் பொறுத்தவரை தொடக்க காலத்தில் இருந்து ஒரு இடதுசாரி இயக்கம் என்ற புரிதலோடுதான் இயங்கி வருகிறது. தலித் பிரச்சனைகளுக்கு எவ்வளவு முன்னுரிமை கொடுக்க முடியுமா அவ்வளவு முன்னுரிமை கொடுத்துதான் இந்த இயக்கம் முன்னுக்கு வந்தது. ஆனால் நாங்கள் எல்லா நிலைமைகளிலும் நின்று இருக்கிறோம். இஸ்லாமிய சமூகத்தை சந்திப்பது குடியுரிமை திருத்தச்சட்ட விஷயத்துல மற்ற தலித் இயக்கங்கள் பெரிய அளவில் தலையிட்டதா எனக்கு தெரியல. விடுதலை சிறுத்தைகள் கட்சி அதனை கடுமையாக எதிர்த்தோம். பல போராட்டங்களை நடத்தினோம். கடைசியாக, திருச்சியில் 'தேசம் காப்போம்' என்று பெரிய பேரணி நடத்தினோம். கேரளா, கர்நாடகா, ஆந்திரா மாநிலங் களிலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி சிறுபான்மை சமூகத்தினரோடும் இடதுசாரி இயக்கங்களோடும் இணைந்து இந்தச் சட்டத்தை கடுமையாக எதிர்த்தோம். பொதுவாக, அம்பேத்கர் இயக்கங்கள், இதுபோன்றவற்றில் கவனம் செலுத்துவதில்லை. சாதி அடையாளங்களில் மட்டுமே நின்று கொள்கின்றன. இதுதான் தேக்கத்துக்கு காரணம் என்று நான் நினைக்கிறேன்.

( தொடரும்... )

# தோழர் வினோத் மிஸ்ரா,
# சற்றும் சளைக்காத மக்கள் ஜனநாயகப் போராளி!

திபங்கர்




இவ்வாண்டு தோழர் வினோத் மிஸ்ரா மறைந்த 25வது ஆண்டு நினைவுநாளை அனுசரிக்கிறோம். நக்சல்பாரிக்குப் பிந்தைய கட்டத்தில், சிபிஐஎம்எல் கட்சியை மறுசீரமைத்திட, விரிவாக்கிட, பலப்படுத்திட அவர் ஆற்றிய வரலாற்றுச் சிறப்புமிக்க பங்களிப்பை நாம் நினைவுகூருகிறபோது, என்றென்றும் உத்வேகமூட்டும் அவரது புரட்சிகர மரபுக்கு நாம் அஞ்சலி செலுத்துகிறபோது, இந்திய அரசமைப்புச் சட்ட ஜனநாயகத்தின் மீதான பாசிசத் தாக்குதலை முறியடிக்க வேண்டிய மைய சவாலின் பின்னணியில், அவரது உள்ளார்ந்த, மையமான கருத்துக்களையும் பங்களிப்புகளையும் குறித்த ஒரு மறுபார்வை என்பது மிகவும் பொருத்தமானதாக இருக்கும்.

*28 ஜூலை 1974* அன்று, தோழர் சாரு மஜும்தார் தியாகியான இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, கட்சி மத்திய கமிட்டி மறுசீரமைப்பு செய்யப்பட்டபோது, நாடு முழுவதும் மிகப்பெரும் பின்னடைவுக்கு எதிராக போராடிக் கொண்டிருந்தது சிபிஐஎம்எல் கட்சி. புதிதாக உருவாக்கப்பட்ட கட்சியின் மத்திய தலைவர்கள், கிட்டத்தட்ட அனைவரும், அரசால் கொல்லப் பட்டிருந்தனர் அல்லது சிறையில் அடைக்கப்பட்டிருந்தனர். ஆயிரக்கணக்கான கட்சி செயல்வீரர்கள் மரணத்தைத் தழுவி தியாகிகளாகி இருந்தனர் அல்லது மிகக்கடும் ஒடுக்குமுறையைச் சந்தித்துக் கொண்டிருந்தனர். அப்போதுதான் பிறந்து, தவழ்ந்து கொண்டிருந்த கட்சி அமைப்பு அவ்வளவு பெரிய ஒடுக்குமுறையை, குழப்பங்களை, சோர்வடையச் செய்யும் சூழலை எதிர்கொள்ளத் தக்கதாக இருக்கவில்லை. இயக்கமும் அமைப்பும் பிளவுண்டு போவது வழக்கமாகியது. இத்தகைய மிகக்கடும் சவால் மிக்க சூழலில்தான், 29 நவம்பர் 1975ல் தோழர் ஜாகர் தியாகியான பிறகு, கட்சிக்குத் தலைமை தாங்கும் பொறுப்பை ஏற்றார் தோழர் வினோத் மிஸ்ரா (விஎம்).

*1970*களின் பிற்பகுதியிலும் *1980*களிலும், நிலப்பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்ட எழுச்சியின் மத்தியில், பலதரப்பட்ட, துடிப்புமிக்க வெகுமக்கள் முன்முயற்சிகளுக்கு மத்தியில், கட்சியை மீட்டெடுப்பதற்கும் விரிவாக்குவதற்கும் இட்டுச்சென்ற மூல காரணிகள் அல்லது கருத்துக்கள் என்னவாக இருந்தன? மார்க்சியம் லெனினியத்தையும் மாவோ படைப்புகளையும் அக்கறையுடன் படிப்பது, ஆழமான சமூக ஆய்வுகள், பகுப்பாய்வுகள், புரட்சிகர சமூக மாற்றப் பார்வை மற்றும் நிலைப்பாட்டுடன் இந்திய அரசியலில் விமர்சனப்பூர்வமாக ஊடாடுவது ஆகியவற்றின் அடிப்படையில் ஒரு புரட்சிகர செயல்தந்திர வழியை வளர்த்தெடுத்தது, கடந்த காலம் பற்றிய இயங்கியல் ரீதியான மதிப்பீடு ஆகிய இந்த இரண்டு முக்கிய காரணிகள்தான் கட்சியை வளர்ச்சிப் பாதையில் உந்தித் தள்ளியது. இந்தப் பாதையின் ஒவ்வொரு அம்சம் குறித்தும் தோழர் விஎம் ஆழ்ந்த கவனம் செலுத்தினார்.இயங்காற்றல் மிக்க சூழ்நிலையின் தேவைகளுக்கு செவிசாய்க்கும் விதத்தில் துணிச்சலான அரசியல் முன்முயற்சிகளை அடி மேல் அடியாக தொடர்ந்து

எடுத்து வைத்தது கட்சி.

நக்சல்பாரி எழுச்சி என்பது கம்யூனிஸ்ட் இயக்கத்தின் ஒரு மிகப்பெரும் மைல்கல் மட்டுமல்ல, அது நவீன இந்தியாவிற்கான ஒரு மாபெரும் திருப்புமுனையாகவும் இருந்தது. நக்சல்பாரி எழுச்சியைத் தொடர்ந்து, உடனடியாக, மின்னல் வேகத்தில் சிபிஐஎம்எல் கட்சி வடிவம் பெற்றதும், தனது இறக்கைகளை நாடு முழுவதும் பரப்பியதும், இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான தலித் ஆதிவாசி கிராமப்புற ஏழை மக்கள் மத்தியில் மட்டுமல்ல, படித்த நகர்ப்புற இளைஞர்கள், அறிவாளிகள் மத்தியிலும் அது மாபெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியதும் அதன் தாக்கத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகிறது. சுதந்திர இந்தியாவில் நடந்த, ஒரு புரட்சிகர மாற்றத்திற்கான முதல், மிகப்பெரும் வெகுமக்கள் எழுச்சியாக அது அமைந்தது. அப்போது நிகழ்ந்த மிகமோசமான ஒடுக்குமுறையும் பின்னடைவும், ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு தவறான போக்குகளைத் தோற்றுவித்தது. தவறுகளைச் சீர்செய்வது என்ற பெயரில் அந்த மக்கள் எழுச்சியில் இருந்து தன்னை விலக்கிக் கொள்வது, அதோடு இருந்த தொடர்பை உதறித் தள்ளுவது, அவதூறு பரப்புவது என்பதாக ஒரு போக்கு துவங்கியது. மற்றொரு போக்கு, நக்சல்பாரி காலத்தின் போராட்ட வடிவங்களையும் முழக்கங் களையும் நிரந்தரமானதாகவும், இறுதியானதாகவும் அவற்றைப் போர்த்தந்திர மட்டத்திற்கு உயர்த்தி, ஒரு தற்காப்பு அணுகுமுறையை மேற்கொண்டது.

தோழர் வினோத் மிஸ்ரா தலைமையில் மறுசீர மைக்கப்பட்ட சிபிஐஎம்எல், தவறுகளிலிருந்து கற்றுக் கொள்வது, மாறிய நிலைமைகள், சூழல் களில் நக்சல்பாரியின் உணர்வையும் படிப்பினை களையும் முன்னெடுத்துச் செல்வது எனும் இயங்கி யல் அணுகுமுறையை மேற்கொண்டது. ஒரு குறிப் பிட்ட வரலாற்றுக் கட்டத்தின் பின்னணியில் நக்சல்பாரியைக் காண்பதில் வெற்றி கண்டவு டனேயே, போர்த்தந்திரப் பார்வை, பாதையிலிருந்து செயல்தந்திரப் பிரச்சனைகளை விடுவிக்கும் சவாலைத் தீர்க்கத் துவங்குவது நம்மால் முடிந்தது. இவ்வாறுதான் எச்சரிக்கையாகவும் அதே நேரத்தில் துணிச்சலாகவும் நம்பிக்கையோடும் தனது அடிகளை எடுத்துவைத்து, நக்சல்பாரியின் புரட்சிகர உணர்வை ஊட்டி, வெகுமக்கள் முன்முயற்சி எனும் பரந்த அரங்கிற்கு தனது கால்களைப் பரப்பி, கட்சி முன்னேறிச் சென்றது. வெகுமக்களோடு நெருக்கமாக உறவு கொண்டு, அவர்களது நலன்களை உயர்த்திப் பிடிப்பதையே கட்சியின் உச்சபட்ச கடமையாகக் கொள்ள வேண்டும், அதன் மூலம் கட்சியை உயிரோட்டமாக வைத்திருக்க வேண்டும் என்ற தோழர் சாரு மஜூம்தாரின் கடைசி வார்த்தைகள், கட்சியை மீட்டெடுக்கும், மறுசீரமைக்கும் இயக்கப் போக்கிற்கு மிகப்பெரும் விதத்தில் உதவியது.

பொருளாதாரவாதத்தை மறுதலிப்பதன், அரசியலை ஆணையில் வைப்பதன் உருண்டு திரண்டதோர் வடிவமாக, நக்சல்பாரி விவசாயிகள் எழுச்சியைத் தொடர்ந்து உருவான சிபிஐஎம்எல் திகழ்ந்தது. உடனடி கோரிக்கைகள் பெரும்பாலும் பொருளாதார கோரிக்கைகள் வெகுமக்கள் போராட் டங்களை வளர்த்தெடுத்திட எப்போதுமே கேந்திர மானவை. ஆனால், மனிதச் சுரண்டலை ஒழிப்பதை நோக்கமாக கொண்ட கம்யூனிஸ்ட் அரசியல், முதலாளித்துவ அமைப்புமுறையை மாற்றியமைப் பது எனும் பரந்த நோக்கத்தைச் சாதித்திட, போராட்ட சக்திகளை அணிதிரட்டுவது, அவற்றின் நோக்கமாக அதை மாற்றிடுவது எனும் அரசியல் கருத்தியல் சவாலோடு, வெகுமக்கள் மத்தியிலான வேலைகளை இணைத்திட வேண்டும். இங்குதான், தற்கால கடமைகளோடு எதிர்கால லட்சியத்தை இணைப்பது என்கிற மாபெரும் சவால் முன்னிற்கிறது. மறுசீரமைக் கப்பட்ட சிபிஐஎம்எல், மக்களை அவர்களது உடனடி கோரிக்கைகள் மீது அணிதிரட்டுவது என்பதற்குக் கவனம் செலுத்தும் அதே வேளையில், உடனடி கோரிக்கைகளையும் உள்ளூர் போராட்டங்களையும் ஒரு ஜனநாயக மாற்றணி என்கிற தேசியப் பார்வை யோடு இணைத்திட சிறப்பு கவனம் செலுத்தியது. அது இந்திய மக்கள் முன்னணி என்கிற ஒரு அகில இந்திய புரட்சிகர ஜனநாயக மேடை உதிப்பதற்கு இட்டுச் சென்றது.

ஒரு புரட்சிகர ஜனநாயகப் பார்வையைக் கொண்ட, துணிச்சலான, தொடர் முன்முயற்சிகளைக் கட்டவிழ்த்துவிடுகிற ஒரு அகில இந்திய அரசியல் மேடையின் உதயம், உள்ளூர்மட்ட வெகுமக்கள் செயலூக்கத்தின் வளர்ச்சிக்கு ஒரு புதிய பரிமாணத் தையும் ஒரு புதிய உத்வேகத்தையும் வழங்கியது. ஒரு அகில இந்திய அரசியல் உந்துதல் என்பது, பொதுவான போக்கான உள்ளூர் வாதத்திற்கு எதிரான உள்ளார்ந்ததோர் எதிர்வினையாகவும் பொருளாதார வாதத்தைக் கட்டுக்குள் வைத்திடவும் அரசியலை ஆணையில் வைத்திடவும் உதவுவதாக அமைந்தது. *1980*களின் பிற்பாதியில் தேர்தலில் போட்டியிட இந்திய மக்கள் முன்னணி தீர்மானித்த போது, நிலப்பிரபுத்துவ சக்திகள் வாக்குச் சாவடிகளைக்

கைப்பற்றுவதற்கு எதிராகப் போராடி, ஒடுக்கப்பட்ட வறிய மக்களின் வாக்களிக்கும் உரிமையை வென்றெடுப்பதற்கான கசப்பான போராட்டமாக அது மாறியது. தேர்தல் புறக்கணிப் பிலிருந்து தேர்தல் பங்கெடுப்பு வரையிலான அந்த மாறிச்செல்லும் கட்டம் என்பது ஒதுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின் தேர்தல் அறுதியிடலின் தீர்மானகரமான யுத்தமாக பொருள் பெற்றது. பீகார் போன்ற மாநிலத்தில் அது மிகப்பெரும் நிலப் பிரபுத்துவ எதிர்த்தாக்குதலை (backlash) எதிர் கொள்ள வேண்டியதாயிற்று. தனியார் படைகளின் தொடர் படுகொலைகள், தலைவர்கள், செயல் வீரர்கள் கொலை செய்யப்படுவது, கட்சி அமைப் பாளர்களை பொய் வழக்குப் புனைந்து துன்புறுத்து வது, நீடித்த சிறைத் தண்டனைக்கு அவர்களை ஆளாக்குவது என புரட்சிகர இயக்கத்தின் முன்னேற் றத்தை, தேர்தல் அறுதியிடலைத் தடுத்து நிறுத்து வதற்கான அனைத்தும் தழுவிய முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன.

தோழர் வினோத் மிஸ்ரா தலைமையிலான சிபிஐஎம்எல், எண்ணற்ற சிரமங்களுக்கு மத்தி யிலும், அத்தகைய சவால்கள் அனைத்தையும் துணிச்சலோடும் உறுதியோடும் தாக்குப்பிடித்து நின்றது, புரட்சிகர ஜனநாயகப் பதாகையை உயர்த்திப் பிடித்தது. போர்க்குணமிக்க நிலப் பிரபுத்துவ எதிர்ப்பு மக்கள் போராட்டங்களின் ஆற்றலும் சமூக நீதி, சமூக மாற்றத்திற்கான பலதரப் பட்ட ஜனநாயக முன்முயற்சிகளும்தான், எதிர்மறை யான நிலைமைகளுக்கு மத்தியிலும், நிலப் பிரபுத்துவ கிரிமினல் சக்திகளின் ஒருங்கிணைந்த தாக்குதல்களுக்கு மத்தியிலும், கட்சியைத் தாக்குப் பிடித்து நிற்கச் செய்தன, கட்சியை வலுப்படுத்தின. ஆனால், 1980களின் பிற்பகுதியில், 1990களின் துவக்கத்தில், அன்றைய மத்திய பீகாரில் (மாநிலம் பிரிக்கப்பட்டதற்குப் பிறகு தெற்கு பீகார் என அழைக்கப்படுகிறது) தேர்தலில் கட்சியின் உதயம், நிலப்பிரபுத்துவ எதிர்வினையையும் கூட வலுப் படுத்தியது எனலாம். ராமர் கோவில் இயக்கத்தின் மீது சவாரி செய்த இந்துத்துவா பட்டாளத்தின் வளர்ச்சி பீகாரில் தெட்டத்தெளிவானதோர் மாற்றத்தைக் கொண்டு வந்தது. போராடும் கிராமப்புற வறியவர்களுக்கு எதிரான, அவர்களின் கட்சி சிபிஐஎம்எல்லுக்கு எதிரான நிலப்பிரபுத்துவ வன்முறை, நச்சு கலந்த பாசிச கூறுகளைப் பெறத் துவங்கின. ரன்வீர் சேனா நடத்திய, அபகீர்த்தி பெற்ற, முதல் பெரும் படுகொலையான, போஜ்பூரின் பதானிதோலா படுகொலைக்குப் பிறகு, ரன்வீர் சேனாவின் அணுகுமுறையில் திட்டவட்டமான மதவெறி இழையோடுவதை தோழர் விஎம் கண்ட றிந்தார். உண்மையில், பதானிதோலாவில் பெண்கள், சிறுவர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட வன்முறை, 2002ல் குஜராத்தில் நாம் கண்ட கோரப்படுகொலை வெறியாட்டத்திற்கான ஒரு முன்னோடியே எனலாம்.

அத்வானியின் ரத யாத்திரை முதல் அதன் இறுதி நிறைவாக 6 டிசம்பர் 1992ல் அயோத்தியாவில் பாபர் மசூதி இடிக்கப்பட்டது வரை, அவை அனைத்திலும் கட்டமைக்கப்பட்டவிதத்தில் குடிகொண்டிருந்த பாசிசக் கூறுகள் குறித்து தோழர் விஎம் மிகத்தெளிவாக இருந்தார். அதை அவர் மத அடிப்படைவாதத்திற்கும் அல்லது மத வெறிக்கும் தாராளவாதத்திற்கும் இடையிலான மோதலாகக் காணவில்லை. மாறாக, அதை மதவெறி பாசிசத் திற்கும் அரசமைப்புச் சட்ட ஜனநாயகத்துக்கும் இடையிலான தெட்டத் தெளிவான யுத்தமாக அவர் கண்டார். ஜனநாயகத்துக்கு எதிரான அச்சுறுத்தல், அதற்கு அக்கம்பக்கமாகவே எழுந்த இந்துத்துவா மற்றும் கார்ப்பரேட் ஆதிக்கத்தின் காரணமாக, தீவிரமடையத் துவங்கியது. அதிகரித்து வரும் இந்த அபாயம் குறித்து தோழர் விஎம் நெருக்கமாக கவனித்து வந்தார். இந்தப் புதிய, சவால்மிக்க கட்டத்தை எதிர்கொள்ளத் தக்கதாக கட்சியைத் தயார் செய்திடவும், கூருணர்வு பெற்றதாக்கிடவும் தன்னலான அனைத்தையும் செய்தார் தோழர் விஎம். மத்தியில் மோடி அரசாங்கத்தின் இந்தப் பத்தாவது ஆண்டில், 1990களின் பிற்பகுதியில் குறுகிய காலமே ஆட்சியிலிருந்த, அடல் பிகாரி வாஜ்பேயின் முதல் தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசாங்கத்தைத் திருப்பிப் பார்க்கிறபோது, அது மிகமிக மென்மை யானதாக காணப்படலாம். பல அரசியல் நோக்கர் களும் கூட, திட்டமிட்டு உற்பத்தி செய்யப்பட்ட வாஜ்பேயின் மென்மையான தோற்றத்தைக் கண்டு திசைதப்பி விட்டனர். ஆனால், தோழர் விஎம், எதிர்காலத்தில் வரவிருக்கும் விசயங்களின் வடிவம் குறித்து முன்னதாகவே தொடர்ந்து எச்சரித்து வந்தார். தோழர் விஎம் தனது கடைசி நாட்களில், இந்தியாவில் பாசிச எதிர்ப்பு அரசியல் பரப்புரை இயக்கத்தைக் கட்டி எழுப்பிடுவதற்குத் தன் முழு கவனத்தையும் செலுத்தினார்.

தோழர் விஎம்மைப் பொறுத்தளவில், ஜனநாய கத்தின் மீதான கவனம் என்பது ஒருபோதும், தற்போது நிலவும் அமைப்புமுறையோடு சமரசம்

செய்து கொள்வது குறித்தது அல்ல, மாறாக, அது சமூக, அரசியல் மாற்றத்தின் அத்தியாவசியமான உட்கூறு ஆகும். 1980களின் பிற்பகுதி முதல் சோவியத் மாதிரி சோசலிசத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து பெறப்பட்ட முக்கிய படிப்பினைகள் குறித்து வலியுறுத்தி வந்தார் தோழர் விஎம். சோசலிச பொருளாதார இயங்காற்றல் மற்றும் அதிக பங்கேற்புடைய ஜனநாயகத்தின் மூலம் சோசலிசத்தை மீளுருவாக்கம் செய்திடும் சவாலை நோக்கி நம் கவனத்தைத் திருப்பினார். சோவியத் யூனியன் வீழ்ச்சி மற்றும் தகர்வு, உலகில் ஒரு துருவ நிலையை உருவாக்கியது, அமெரிக்க ஏகாதிபத்தியம் இந்தத் தருணத்தை முழுமையாக பயன்படுத்திக் கொண்டது. 1990–91 வளைகுடா யுத்தம் முதல், முஸ்லீம் விரோத சவடால்களால் குறிக்கப்பட்ட, "நாகரீகங்களின் மோதல்" என்பதாக அழைக்கப்பட்ட, தன் தலைமையிலான ஒரு புதிய மேற்கத்திய கூட்டணியை அமெரிக்கா உருவாக்கியது. அதுவே பின்னர், பயங்கரவாதத்திற்கு எதிரான உலக யுத்தமாக பரிணாமம் பெற்றது. இந்தக் கூட்டணி தான், இன்று இஸ்ரேலால் காஸாவின் மீது தொடுக்கப்பட்டிருக்கும் இனப்படுகொலை யுத்தத்திற்கு ஆதரவு அஸ்திவாரமாக இருக்கும், மிகச் சமீபத்திய, தீவிர வலதுசாரி உலகக் கூட்டணியுடன் ஒன்றுகலந்து இருக்கிறது.

சோவியத் முகாமின் மறைவு, உலக முதலாளித்துவத்தின் மூர்க்கத்தனமான விரிவாக்கம் என்பதாக, தாராளமயமாக்கம், தனியார்மயமாக்கம், உலகமயமாக்கத்தின் ஒருங்கிணைந்த தாக்குதலாக பொருளாகியது. இந்த விரிவாக்கத்தினுள், மிக ஆழமான நெருக்கடியின், புதிய முரண்பாடுகளின் வித்துக்கள் புதைந்திருப்பதை தோழர் விஎம் கண்டார். கடந்த இருபது ஆண்டுகளில் உலக முதலாளித்துவம் சந்தித்து வரும் பன்முகப்பட்ட நெருக்கடிகள், அதனோடு பருவநிலை மாற்றத்தால் உருவாக்கப்பட்ட பேரழிவும் இணைந்திருப்பது அவரது கருத்து சரியென நிரூபித்திருக்கிறது. இது தாராளவாத ஜனநாயகமும் சேமநல அரசும் புதியதோர் நெருக்கடிக்கு ஆளாவதற்கு, பாசிசம் உலக அளவில் புத்துயிர் பெறுவதற்கு இட்டுச்சென்று இருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை வெளியிடப்பட்ட 150வது ஆண்டில் அதைப் பற்றி எழுதும் போது தோழர் விஎம், முதலாளித்துவ ஜனநாயகத்தின் மிகச் சிறந்த வடிவங்களின் எல்லைகளையும் தாண்டிச் செல்லக் கூடியதாக, பாட்டாளி வர்க்க ஜனநாயகத்தின் வடிவங்களைக் கண்டறிய வேண்டிய சவாலை வலியுறுத்தினார். அதன் மூலம் எதிர்காலத்தில் முதலாளித்துவத்தின் தோல்வி என்பது சோசலிசத்தின் வெற்றியாக மட்டுமல்ல, ஜனநாயகத்தின் வெற்றியாகவும் காணப்பட வேண்டும் என்றார்.

இந்தியாவின் அரசமைப்புச் சட்டத்தை நிறைவேற்றும் தருணத்தில், நாடாளுமன்ற ஜனநாயகத்தை அறிமுகப்படுத்தும் தருணத்தில், புதிய அமைப்பு முறையின் முரண்பாடுகள் மற்றும் எல்லைகள் பற்றி பாபாசாகேப் அம்பேத்கர் நம்மை எச்சரித்தார். அதாவது, வெறும் வாக்குரிமை சமத்துவத்திற்கும் ஆழமாக வேரூன்றியிருக்கும் சமூக பொருளாதார சமத்துவமின்மைக்கும் இடையிலான முரண்பாடு குறித்து, இந்தியாவின் பாரம்பரியமான, ஜனநாயக மற்ற மண்ணுக்கும் மேலிருந்து அரசமைப்புச் சட்டத்தின் மூலம் மேலாடை அணிவிக்கப்பட்ட ஜனநாயகத்திற்கும் இடையிலான மோதல் குறித்து அவர் எச்சரித்தார். அவரவருக்கே உரிய பின்புலத்தில், முற்போக்கு ஜனநாயகவாதியான அம்பேதக்ரும் புரட்சிகர கம்யூனிஸ்டான வினோத் மிஸ்ராவும் இந்திய சமுதாயத்திலும் அரசியலிலும் நிலவும் அதே முரண்பாடுகளையும் குறைபாடுகளையும் கையாள (addressed) முயற்சித்தனர். ஒடுக்கப்பட்ட, விளிம்பு நிலை மக்களின் உரிமைகளை விரிவாக்கிடவும் அறுதியிடலை மேம்படுத்துவதற்குமான வழிகளைக் கண்டறிய முயற்சித்தனர். சோசலிச பொருளாதாரத்தையும் நாடாளுமன்ற ஜனநாயகத்தையும் ஒருங்கிணைந்ததாக மாற்றிட முடியுமென அம்பேத்கர் துவக்கத்தில் நம்பினார். சோசலிசத்திற்கு ஒரு நாடாளுமன்றப் பாதையைக் கண்டறிவது குறித்த எந்தவொரு மாயையும் வினோத் மிஸ்ராவுக்கு கிடையாது என்றாலும் இந்திய மக்களின் முன்னோக்கிய அணிவகுப்பை மேலும் முன் கொண்டு சென்றிட, தற்போது எப்படிப்பட்ட ஜனநாயகம் நிலவுகிறதோ அதன் ஆற்றலைப் பயன்படுத்துவது விரிவுபடுத்துவதற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஒரு புதிய அரசமைப்புச் சட்டம் குறித்து வளர்ந்துவரும் கவர்ச்சி அல்லது நிலவுகிற அரசமைப்புச் சட்டத்தை, நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நிறுவன கட்டமைப்பை, எப்படியாவது ஒழித்துவிடுவது என்கிற விதத்திலான மிகக்கடும் பாசிசத் தாக்குதலை இன்று இந்தியாவின் நாடாளுமன்ற ஜனநாயகம் எதிர்கொண்டிருக்கும் போது, பாசிசத்தைத் தோற்கடிப்பதற்கான, ஒரு உறுதியான ஜனநாயக எதிர்காலத்தை எட்டுவதற்கான இந்தியாவின் யுத்தத்தில் தோழர் விஎம்மின் கருத்துக்களும் பங்களிப்புகளும் நமக்கு எப்போதும் உத்வேக மூட்டும் வழிகாட்டியாக இருக்கும்.

**தமிழாக்கம் – விஎஸ்**

# 2023இன் இறுதிச்சுற்றுத் தேர்தல்களில் இருந்து கிடைக்கும் பாடங்கள்

**2024இல் பாஜகவை ஆட்சியிலிருந்து அகற்றுவது முற்றிலும் சாத்தியமே. நிச்சயமாக இந்தப் பொறுப்பு இந்தியா கூட்டணி மீதே உள்ளது. மேலும் எந்தவொரு தாமதமும் இல்லாமல் தனது செயல்களை ஒருங்கிணைத்துக் கொண்டு, 2024இல் ஒரு தீர்மானகரமான வெற்றியை நோக்கி மக்களிடம் தூண்டுதலை ஏற்படுத்த, அன்றன்றைக்குள்ள பற்றியெரியும் பிரச்சினைகள் மீது ஆற்றல்மிகு வெகுமக்கள் இயக்கத்தை கட்டமைக்க வேண்டும்.**

நவம்பரில் நடைபெற்ற அய்ந்து சட்டமன்றத் தேர்தல்களின் முடிவுகள் கிட்டத்தட்ட அனைத்து கருத்து கணிப்புகளும் கள அறிக்கைகளும் தவறென நிரூபித்துள்ளன. மத்திய பிரதேசத்தில் பாஜகவிற்கு மாபெரும் வெற்றி கிடைக்கும் என்று கணித்த வாக்குப் பதிவிற்குப் பிந்தைய சில கணிப்புகளும் கூட, அருகிலுள்ள சத்தீஸ்கரில் காங்கிரசுக்கு எளிதான பெரும்பான்மை கிடைக்கும் என்றன. அதனால் மத்திய பிரதேசத்தில் பாஜகவின் 18 ஆண்டுகால ஆட்சிக்குப் பின் மாற்றம் வேண்டிய பரந்த மக்களின் ஏக்கத்திற்கான அறிகுறிகளும், சத்தீஸ்கர் மற்றும் ராஜஸ்தான் காங்கிரஸ் அரசாங்கத்திற்கு எதிராக மக்களிடமிருந்து அத்தகைய அறிகுறிகள் எதுவும் வெளிப்படாத பின்னணியிலும், ஹிமாச்சல் பிரதேசம், கர்நாடகாவில் பாஜகவின் சமீபத்திய தேர்தல் தோல்விக்குப் பிறகும், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், சத்தீஸ்கரில் பாஜகவின் மாபெரும் வெற்றி மிகப்பெரிய ஆச்சரியத்தைத் தந்துள்ளது. ஹிமாச்சல், கர்நாடகா வெற்றிக்குப் பின் ஏறுமுகத்தில் இருப்பது போல தோற்றமளித்த காங்கிரசுக்கு தெலுங்கானாவில் மட்டும் ஒரேயொரு வெற்றி கிடைத்தது. புதிதாக உருவாக்கப்பட்ட இந்த மாநிலத்திற்கும் தென்னிந்திய அரசியல் சமநிலை என்ற பரந்த பின்னணிக்கும் தெலுங்கானாவின் இந்த வளர்ச்சிப் போக்குகள் உண்மையில் குறிப்பிடத்தக்க மாற்றத்தைக் குறிக்கின்றன. மத்திய, மேற்கு இந்தியாவின் மூன்று பெரிய மாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்கு ஏற்பட்ட தோல்வியால், அதன் தெலுங்கானா வெற்றியை மறைக்க முடியாது.

இந்த ஆச்சரியமான முடிவுகளுக்கு வழிவகுத்த காரணிகளை காண்பதற்கு முன்பு, சத்தீஸ்கர், மத்திய பிரதேசம், ராஜஸ்தானில் வாக்குகளின் பங்கில் நிகழ்ந்த மாற்றம் குறித்து நெருக்கமாக சென்று பார்ப்போம். வாக்குகளின் பங்கு என்ற அடிப்படையில் காங்கிரஸ் எந்தவொரு பெரிய இழப்பையும் சந்திக்கவில்லை என்றே தோன்றுகிறது. அதனுடைய வாக்குகளின் பங்கு மத்திய பிரதேசத்தில் (41 லிருந்து 40.4 ஆக) 0.6%மும், சத்தீஸ்கரில் (43.1 லிருந்து 42.2 ஆக) 0.9%மும் மட்டுமே குறைந்துள்ளது. ராஜஸ்தானில் மிகக் குறைந்தளவாக (39.3 லிருந்து 39.5 ஆக) 0.2% அதிகரிப்பையும் கூட அது பதிவு செய்துள்ளது. மத்திய பிரதேசத்தில் (41.1 லிருந்து 48.55 ஆக) 7.45%மும், சத்தீஸ்கரில் (33 லிருந்து 46.27 ஆக) 13.27%மும், ராஜஸ்தானில் (38.8 லிருந்து 41.7ஆக) 2.9%மும் பாஜக வாக்குகளின் பங்கு பெருமளவு அதிகரித்ததால் தான் இந்த முடிவுகளில் வியத்தகு மாற்றம் ஏற்பட்டுள்ளது.

மேலோட்டமாக பார்க்கும் போது, பாஜக வாக்குகளின் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பது பெருமளவுக்கு மற்ற பாஜக அல்லாத கட்சிகள் போல காங்கிரசின் வாக்கு இழப்பினால் நிகழவில்லை. ஆனால்

இந்த எண்களைத் தாண்டி களத்தில் சமூக ரீதியாக, தேர்தல் ரீதியாக நிகழ்ந்த உண்மையான மாற்றங்களை நாம் தெளிவாக காண வேண்டிய தேவையுள்ளது. காங்கிரசுக்கு பழங்குடியினரின் ஆதரவில் ஏற்பட்ட அரிப்பு ஒரு குறிப்பிடத்தக்க மாற்றமாகும். மத்திய பிரதேசத்திலும் சத்தீஸ்கரிலும் மொத்தமுள்ள 76 இல் 44 எஸ்டி இடங்களை (2018 இல் 19 என்ற எண்ணிக்கையிலிருந்து 25 இடங்கள் அதிகரிப்பு) பாஜக கைப்பற்றியது. ராஜஸ்தானில் மேலும் 4 எஸ்டி இடங்களை தனது பையில் போட்டு கொண்டது. மேலும் புதிதாக அமைக்கப்பட்ட பாரதிய பழங்குடியினர் கட்சி பத்து லட்சம் வாக்குகளுக்கு நெருக்கமாக பெற்று மூன்று இடங்களில் வெற்றிகளை பெற்றும் நான்கு இடங்களில் இரண்டாவதாகவும் வந்துள்ளது.

ஹிமாச்சலிலும் கர்நாடகாவிலும் தோல்வியை சந்தித்த பிறகு, மத்திய பிரதேசத்தை தக்கவைக்கவும் காங்கிரசிடமிருந்து ராஜஸ்தானையும் சத்தீஸ்கரையும் கைப்பற்றவும் பாஜக தீவிர முனைப்புடன் செயல் பட்டது. தேர்தல் காலம் முழுவதும் அமலாக்கத் துறையை அப்பட்டமாக பயன்படுத்தியதற்கு இந்தத் தேர்தல்கள் சாட்சியமானது. மாதிரி நடத்தை விதிமுறைகள் மீறப்பட்டதை கையாள்வதில் இரட்டை அணுகுமுறை மேற்கொள்ளப்பட்டது. மேலும் தேர்தல் செயல்முறையின் மாறுபட்ட மட்டங்களிலும் நிலைகளிலும் நிர்வாக சூழ்ச்சி இருந்ததெனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனாலும் இன்றைய இந்தியாவில் நியாயமான தேர்தல்களை நாம் உண்மையில் எதிர்பார்க்க முடியாதுதான். பாஜக அல்லாத சக்திகள் தேர்தல் களில் வெற்றிபெற வேண்டுமானால் முழுவதும் ஆற்றல்வாய்ந்த, வெகுமக்கள் பங்கெடுப்பு, துல்லியமான பூத் மட்ட அணிதிரட்டல் என தேர்தல் இயக்கம் மெய்யான மக்களின் இயக்கமாக கண்டிப்பாக மாற்றப்பட வேண்டும். கர்நாடகா விலும் தெலுங்கானாவிலும் காங்கிரசின் வெற்றிகர மான தேர்தல் இயக்கங்கள் கருத்தில் கொள்ளத்தக்க வெகுமக்கள் இயங்காற்றலையும் வீரியத்தையும் வெளிப்படுத்தியது. ஆனால் மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், மூன்றில் சிறப்பாக செயல்பட்ட ராஜஸ் தானிலும், இந்த இயங்காற்றலும் வீரியமும் காணாமல் போய்விட்டது.

கர்நாடகாவில் பொம்மையால் தலைமை தாங்கப்பட்ட ஆட்சியிலிருந்த பாஜக அரசாங்கத்தின் ஊழல், அனைத்து மட்ட தோல்வியை அம்பலப்படுத் தியதன் மூலம் காங்கிரஸ் வெற்றி பெற்றது. ஆனால் கர்நாடகாவிலிருந்து கற்றுக் கொண்ட பாஜக மத்திய பிரதேசத்தில் தனது ஆட்சிக்கு எதிரான எதிர்ப்புணர்வை தணிக்க முயற்சித்தது. பல அமைச்சர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர் களையும் சட்டமன்ற வேட்பாளர்களாக நிறுத்தியது. முதலமைச்சர் சிவராஜ் சிங் சவுகான் அவருடைய அரசாங்கத்தின் முக்கியத்துவமிக்க திட்டங்களை குவிமையப்படுத்தி தனிப்பட்ட முறையில் மும் முரமான பரப்புரை இயக்கத்தை நடத்தினார். காங்கிர சால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை எதிர்கொள்ள பாஜகவும் அதேபோன்ற வாக்குறுதிகளை அளித்தது. அவற்றை 'மோடியின் உத்தரவாதம்' எனவும் கூறியது.

மோடி வழிபாடும், இலக்கு வைக்கப்பட்ட நேரடி பரிமாற்றத்தின் அடிப்படையில் 'பயனாளி களை' கொத்தடிமை வாக்காளர்களாக மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட 'நல பொருளாதார' மாதிரியும், மதவெறி துருவச்சேர்க்கை மற்றும் தாக்குதல் தன்மை கொண்ட இந்துத்வாவின் நிறைபொருளாக மீண்டும் ஒருமுறை செயல்பட்டுள்ளதாக தெரிகிறது. முன்னதாக இந்த ஆண்டு நடைபெற்ற உத்தர பிரதேச தேர்தலிலும் தற்போது மீண்டும் ஒருமுறை மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தானிலும் இந்த சூத்திரத்தை பாஜக வெற்றிகரமாக அமல்படுத்தியது.

கர்நாடகாவில் அதன் சிறப்பான வெற்றியைத் தொடர்ந்து காங்கிரஸ் மய்யமாக, அதானிமோடி கூட்டு, சாதிவாரி கணக்கெடுப்பு என்ற இரண்டு பிரச்சினைகளில் கவனம் குவித்தது. காங்கிரசை பொறுத்தவரையில் அது ஒருபோதும் சாதிவாரி கணக்கெடுப்புக்கும் விரிவாக்கப்பட்ட இட ஒதுக்கீட்டுக்கும் ஆதரவாக இருந்ததில்லை. எனவே, ஓபிசியினருக்கான பிரதிநிதித்துவம், சாதிவாரி கணக்கெடுப்பு ஆகியவை மீதான கவனம் குவிப்பு வரவேற்கத்தக்க புதிய திசைவழியாகும். ஆனாலும் எந்தளவுக்கு இந்த செய்தி ஒட்டுமொத்த அமைப்புக்குள்ளும் ஊடுருவிச் சென்று அதன் அரசியல் வெளிப்பாட்டின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறியுள்ளது என தெரியவில்லை? காங்கிரசின் மத்தியத் தலைவர்கள் இந்தப் பிரச்சினைகளை எழுப்பும்போது, மத்திய பிரதேசத்தில் கமல்நாத் பாகேஸ்வர் பாபா (திரேந்திர சாஸ்திரி) என்ற இந்து ராஷ்டிராவின் தீவிர ஆதரவாளரின் ஆசீர்வாதத்தை பெறுவதில் மும்முரமாக இருந்தார். அதேபோல அதானிமோடி

கூட்டு என்னும் பிரச்சினை நிறுவனமயமாக்கப்பட்ட வெறும் ஊழலை மட்டும் பிரதிநிதித்துவப்படுத்த வில்லை; கார்ப்பரேட் தாக்குதலின் மிகவும் வெட்கக்கேடான வெளிப்பாட்டை பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இந்த ஆணவமிக்க கார்ப்பரேட் அதிகாரத்திற்கு விவசாயிகள் இயக்கம் வெற்றி கரமாக சவால் விட்டது. மோடிஅதானி கூட்டுக்கு எதிரான எந்தவொரு திறன்மிக்க அரசியல் செயல்பாடும், மக்கள் நலன் மற்றும் இந்தியாவின் உண்மையான உற்பத்தியாளர்களின் உரிமைகள் நோக்கி இந்திய பொருளாதார கொள்கைகளை மறு திசைவழிபடுத்துதலுக்காக வளர்ந்து வரும் விவசாயி கள், தொழிலாளர்களின் ஒற்றுமையுடன் உயிரோட்ட மான பிணைப்பை ஏற்படுத்த வேண்டும்.

இந்தத் தேர்தல்களில் காங்கிரஸ் செயல்பாட்டில் இருந்த மற்றொரு பெரும் பலவீனம் என்பது இந்தியா கூட்டணியின் ஆற்றலை பயன்படுத்திக் கொள்வ தற்கான விருப்பமோ திட்டமோ அதனிடம் முற்றிலும் இல்லாததாகும். இதற்கு மாறாக, மத்திய பிரதேசத்தில் காங்கிரசுக்கும் சமாஜ்வாதி கட்சிக்கும் இடையே முற்றிலும் தேவையற்ற சொற்போரை நாம் கண்டோம். தெலுங்கானாவில் பாரத் ராஷ்டிரிய சமிதி (பிஆர்எஸ்) அரசாங்கத்திற்கு எதிரான மக்களின் நீடித்த எதிர்ப்புணர்வை திறன்மிக்க வகையில் ஒருங்கிணைத்த காங்கிரஸ் அதனை குறிப்பிடத்தக்க வெற்றியாக்கியது. ஆனாலும் பாஜகவும் கூட, அதனுடைய வாக்குகளின் பங்கினை 7% திலிருந்து 13.9% என இரண்டு மடங்காக்கி, கடந்த சட்ட மன்றத்தில் தனக்கிருந்த ஒரேயொரு இடத்தை எட்டு இடங்களாக அதிகரித்திருக்கிறது என்பதையும் நாம் நினைவில் கொள்ள வேண்டும். இடதுகள், சமாஜ்வாதி கட்சி, புதிதாக உருவாக்கப்பட்ட பாரதிய பழங்குடியினர் கட்சி மற்றும் இந்தியா கூட்டணியின் ஆற்றலையும் காங்கிரஸ் தனது தேர்தல் இயக்கத்தில் ஒருங்கிணைத்திருந்தால் அனைத்து மாநிலங் களிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை நிகழ்த்தி யிருக்கலாம். மேலும் தெலுங்கானாவில் இன்னும் கூடுதலாக அதன் எண்ணிக்கையை அதிகரித் திருக்கலாம்.

பல நேரங்களில் இந்தியத் தேர்தல் முடிவுகளில் வடக்கு தெற்கு பிரிவினை உள்ளது. மிகவும் குறிப்பாக, தென் மாநிலங்களில் ஓரளவு சிறப்பான நிலையை காங்கிரஸ் பெற்றபோதும் வட இந்தியாவிலிருந்து அது துடைத்தெறியப்பட்ட அவசர நிலைக்கு பிந்தைய தேர்தலில் இந்தக் கூர்மையான மாறுபாட்டினை நாம் கண்டோம். இந்தியாவைப் பல பத்தாண்டுகளுக்கு ஆதிக்கம் செலுத்த கனவு காணும் பாஜகவிற்கு தெற்கின் கதவுகள் மூடப்படுவது நிச்சயமாக ஒரு பெருத்த அடியாகும். ஆனால் 2024 இல் அந்தக் கட்சியை தீர்மானகரமாக தோற்கடிக்க வேண்டுமானால், விந்திய மலைகளுக்கு வடக்கில் அதற்கு உருவம் கொடுத்தாக வேண்டும். மிசோராம் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணியின் மிசோ தேசிய முன்னணியை (எம்என்எ.ஃப்) ஆட்சியிலிருந்து அகற்றி, சோராம் மக்கள் இயக்கம் (இசட்பிஎம்) பெருவாரியான வெற்றியைப் பெற்றுள்ளது. ஆனால் இங்கேயும் கூட, காங்கிரசின் எண்ணிக்கை 5 திலிருந்து 1 ஆக குறைந்து விட்டபோது பாஜக அதன் எண்ணிக் கையை 1 லிருந்து 2 ஆக அதிகரித்திருக்கிறது.

2023 இன் இறுதிச்சுற்றுத் தேர்தல்கள் நிச்சயமாக பாஜகவிற்கு பெரும் மனவலிமை தருவதற்கான உத்வேகமாகும். மேலும் மோடி அரசாட்சி 2024 இல் 'ஹாட் ட்ரிக்' (மூன்று தொடர் வெற்றிகள்) வெற்றிகள் பெறுவது குறித்து ஏற்கனவே பேச ஆரம்பித்து விட்டது. இது உளவியல் சார்ந்த போர்முறையன்றி வேறல்ல. மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், ராஜஸ்தான், தெலுங்கானா ஆகிய நான்கு மாநில சட்டமன்ற தேர்தல் முடிவுகளை மக்களவை அடிப்படையில் பார்த்தோமானால் காங்கிரஸ் அதன் எண்ணிக்கையை 2019இன் 6லிருந்து 28ஆக உண்மையில் அதிகரித் துள்ளது. பாஜகவின் எண்ணிக்கை உண்மை யில் 65 லிருந்து 46 ஆக குறைந்துள்ளது. இந்தச் சட்டமன்ற தேர்தல்கள் 2024இன் முடிவுகளை நிச்சயமாக பாஜகவிற்கு சாதகமாகத் தீர்மானிக்க வில்லை. நாம் பொருத்தமான பாடங்களைப் பெற்றுக் கொண்டால் 2024இல் பாஜகவை ஆட்சியிலிருந்து அகற்றுவது முற்றிலும் சாத்தியமே. நிச்சயமாக இந்தப் பொறுப்பு இந்தியா கூட்டணி மீதே உள்ளது. மேலும் எந்தவொரு தாமதமும் இல்லாமல் தனது செயல்களை ஒருங்கிணைத்துக் கொண்டு, 2024இல் ஒரு தீர்மானகரமான வெற்றியை நோக்கி மக்களிடம் தூண்டுதலை ஏற்படுத்த, அன்றன்றைக்குள்ள பற்றியெரியும் பிரச்சினைகள் மீது ஆற்றல்மிகு வெகுமக்கள் இயக்கத்தை கட்டமைக்க வேண்டும்.

**தமிழாக்கம் – செந்தில்**

# தோழர் என்.கே.நடராஜன் முதலாமாண்டு நினைவேந்தல்



இகக(மாலெ) கட்சியின் முன்னாள் தமிழ்நாடு மாநிலச் செயலாளரும் மத்தியக் குழு உறுப்பினரு மான தோழர் என்.கே.நடராஜன் 2022 டிசம்பர் 10 அன்று எதிர்பாராத நேரத்தில் அவரின் அன்புக்குரிய எம்எல் கட்சியையும் நம்மையும் விட்டுப் பிரிந்தார். தோழர் என்கேயின் முதலாமாண்டு நினைவேந்தல் நிகழ்ச்சிகள் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றன. 10.12.2023 அன்று திண்டுக்கல் மாவட்டம் எரியோட் டில் தோழர் என்கே நினைவு நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முன்னதாக நினைவஞ்சலி கூட்டம் நடைபெற்றது. இகக(மாலெ) மாவட்ட நிலைக்குழு உறுப்பினர் தோழர் ரவி தலைமை தாங்கினார். மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத்தம்பி கட்சிக் கொடியை ஏற்றி தோழர் என்கே படத்திற்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார். தொடர்ந்து மத்திய கமிட்டி உறுப் பினர் தோழர் பாலசுந்தரம், தோழர் அ.சிம்சன், தோழர் தேன்மொழி, தோழர் சுப்புராமன், தோழர் விஜயகுமார் மற்றும் தோழர் கனகராஜ், என்.கேயின் சகோதரர்கள், மாவட்ட நிலைக்குழு மற்றும் மாவட்ட கமிட்டித் தோழர்கள், கட்சி உறுப்பினர்கள் அஞ்சலி செலுத் தினர். தொடர்ந்து தோழர்கள் அனைவரும் என்.கே. நினைவு நாள் உறுதிமொழி ஏற்றுக்கொண்டனர்.

பொதுக் கூட்டத்திற்கு இகக(மாலெ) மாவட்டச் செயலாளர் தோழர் சுப்புராமன் தலைமை தாங்கினார். மாவட்டக் கமிட்டி உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். மாநிலச் செயலாளர் தோழர் பழ.ஆசைத் தம்பி பேசுகையில், சுதந்திர போராட்ட காலத்தில் திண்டுக்கல் மாவட்டத்தின் பங்கு பற்றி குறிப்பிட்டு அந்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு இணையானது தோழர் என்கேவின் புரட்சிகர பயணம் என்று கூறினார். 2024 தேர்தலில் பாசிச பாஜகவை வீழ்த்துவது குறித்தும் சிறப்புரையாற்றி னார். மத்திய கமிட்டி உறுப்பினர் தோழர் பாலசுந்தரம் தோழர் என்.கே., தோழர் சுகுந்தன், தோழர் முனி யாண்டி தாத்தா போன்ற திண்டுக்கல் மாவட்டத் தில் பணியாற்றிய தோழர்களின் வரலாற்றை விரிவாக எடுத்து ரைத்தார். தோழர் ஜெயந்தி, தோழர் என் கே. உடனான தனது அரசியல் பணி பற்றி பகிர்ந்து கொண்டார். தோழர் தேன்மொழி, மக்கள் விரோதி களுக்கு எல்லாம் பொது இடத்தில் சிலை வைக்கும் போது கண்டு கொள்ளாத காவல்துறை இகக(மாலெ) கட்சிக்கு சொந்தமான இடத்தில் தோழர் என்கே விற்கு நினைவுத் தூண் அமைக்க அனுமதி மறுத்ததை கடுமையாக விமர்சித்துப் பேசினார். மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் சிம்சன், தோழர் என்கே போன்றவர்களின் எளிமையான வாழ்க்கை முறை தோழர் ஜீவா போன்ற தலைவர்களின் எளிமையான வாழ்க்கைக்கு இணையானது என்பதை விளக்கிப் பேசினார்.

இகக(மாலெ) புதுக்கோட்டை மாவட்டச் செயலாளர் தோழர் வீ.மு.வளத்தான், மாநிலக்குழு உறுப்பினர் ரெங்கசாமி ஆகியோரும் நினைவேந்தல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். மாவட்ட நிலைக்குழு உறுப்பினர் தோழர் ரவி தீர்மானங்களை முன்வைத்தார். மாநிலக் கமிட்டி உறுப்பினர் தோழர் பொன்னுத்துரை நன்றி கூறினார்.

2024 பிப்ரவரி 1 அன்று தஞ்சையில் நடைபெற விருக்கும் பாசிச எதிர்ப்புப் பேரணிக்கு அதிக எண்ணிக்கையில் மக்களைத் திரட்ட அழைப்பு விடுக்கப்பட்டது.







## தோழர் என்.கே.நடராஜன் நினைவேந்தல்

## நிகழ்வுகள்







## தோழர் என்.கே.நடராஜன் - தோழர் எஸ்.சங்கரநாராயணன் நினைவேந்தல்




இகக(மாலெ) தமிழ்நாடு முன்னாள் மாநிலச் செயலாளர் தோழர் என்.கே.நடராஜன் முதலாமாண்டு நினைவேந்தல் மற்றும் கட்சியின் முன்னோடித் தோழரும் மார்க்சிய லெனினிய சிந்தனையாளருமான தோழர் எஸ்.சங்கரநாராயணன் எட்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்ச்சி 10.12.2023 அன்று திருநெல்வேலி மாவட்ட இகக(மாலெ) கட்சி அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு இகக(மாலெ) நெல்லை மாவட்டச் செயலாளர் தோழர் எம்.சுந்தர்ராஜ் தலைமை தாங்கினார். இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் தோழர் ஜி.ரமேஷ், மாநிலக்குழு உறுப்பினர் தோழர் கே.கணேசன், மாவட்டக்குழு உறுப்பினர் தோழர் வீ.கருப்பசாமி, தோழர் சிவகாமிநாதன், தோழர் விநாயகம் மற்றும் சங்கரநாராயணனின் சகோதரர் சுப்பிரமணியன், தோழர் செல்வகணபதி ஆகியோர் தங்கள் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர்.

# சிபிஐஎம்எல் கர்நாடக மாநில மாநாடு

*2023* டிசம்பர் *9, 10* தேதிகளில், சிபிஐஎம்எல் கட்சியின் கர்நாடக மாநில இரண்டாவது மாநாடு ரெய்ச்சூர் மாவட்டம் சிந்தனூரில் நடைபெற்றது. டிசம்பர் 9 காலை கட்சிப் பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் கொடியேற்றி வைத்தார். செங்கொடிகள் நிறைந்த கண்கவர் பேரணி 4 கி.மீ. தூரம் எழுச்சிகரமாக நடைபெற்றது.




அதற்குப் பின்னர், டவுன் ஹால் அரங்கில் "பாசிசத்திற்கு எதிரான கர்நாடகம்" என்ற தலைப்பில் பொதுமாநாடு ரெய்ச்சூர் மாவட்ட செயலாளர் நாகராஜ் பூஜாரி தலைமையில் நடைபெற்றது. இகக(மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர், அரசியல் தலைமை குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், சிபிஐ(எம்) மாநிலச் செயலாளர் தோழர் பசவராஜ், சிபிஐ கட்சி ரெய்ச்சூர் மாவட்டச் செயலாளர் தோழர் பாசுமியா, கர்நாடகா சிபிஐஎம்எல் மாநிலச் செயலாளர் தோழர் கிளி:.ப்டன், அகில இந்திய முற்போக்கு பெண்கள் கழக தேசியத் தலைவர் ரதிராவ் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.



டிசம்பர் 9 அன்று மதியம் முதல் டிசம்பர் 10 அன்று மாலை வரை நடைபெற்ற பிரதிநிதிகள் அமர்வில், சுமார் *135* பிரதிநிதிகள், பார்வையாளர்கள் கலந்து கொண்டனர். தலைமைத் தோழர்கள் கிளிப்டன், பிஆர்எஸ்.மணி, மைத்ரேயி ஆகியோர் வேலை அறிக்கைகள் மற்றும் வேலைத் திட்டத்தை முன்வைத் தனர். அதன்மீது பல்வேறு திருத்தங்கள், ஆலோசனை களை பிரதிநிதிகள் முன்வைத்தனர். அவற்றின் மீதான விளக்கத்துடன் அறிக்கைகள் நிறை வேற்றப்பட்டன. மாநாட்டில் உரையாற்றிய இகக (மாலெ) பொதுச் செயலாளர் தோழர் திபங்கர் மற்றும் அரசியல் தலைமை குழு உறுப்பினர் தோழர் வீ.சங்கர், 'கர்நாடக அரசியல் சூழல் மற்றும் நமது கட்சியின் வளர்ச்சி மற்றும் சந்திக்கும் சவால்கள் பற்றி' விளக்கிப் பேசினார்கள். மாநாடு *23* உறுப்பினர்கள் கொண்ட புதிய மாநிலக் கமிட்டியை ஒருமனதாக தேர்ந்தெ டுத்தது. தோழர் கிளிப்டன் மீண்டும் மாநிலச் செயலாளராகத் தேர்வு செய்யப்பட்டார். நிறைவாக மத்திய கமிட்டி பார்வையாளர் தோழர் சந்திரமோகன் வாழ்த்துரை வழங்கினார். பிரதிநிதிகளின் எழுச்சிகர மான முழக்கங் களுடனும், சர்வதேசிய கீதத்துடனும் மாநாடு நிறைவுற்றது.






காவிப் பாசிசத்தை அரசியல் களத்தில் வீழ்த்திய கர்நாடகத்தில், மாநிலம் தழுவிய புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியாக சிபிஐஎம்எல் வெல்லட்டும்! ❑

# ஜம்மு காஷ்மீர் மக்களையும் இந்திய அரசியல் சாசன சட்டத்தையும் உச்ச நீதிமன்றம் கைகழுவி விட்டது

370 வது அரசியல் சாசன சட்டப்பிரிவு நீக்கப் பட்டதை உறுதி செய்து, ஜம்மு காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்தை மறுத்ததன் மூலம் அரசியல் சாசன சட்டம் அருவருக்கத்தக்க விதத்தில் மீறப்பட்டதற்கு அரசு நிர்வாகத்தை பொறுப்பாளியாக்குவதில் இன்று உச்ச நீதிமன்றம் தவறிவிட்டது. அரசியல் சாசன சட்டத்தையும் அதன் மீது மக்கள் வைத்திருந்த நம்பிக்கையையும் உச்ச நீதிமன்றம் உண்மையில் கைகழுவி விட்டது.

ஜம்மு காஷ்மீருக்கு அரசியல் சாசன சட்டப்பிரிவு 370, இறையாண்மையை கொடுக்கவில்லை என்றபோதும் அது இந்திய ஒன்றியத்துடன் இணை வதற்கு முக்கியப் பங்காற்றியது. உச்ச நீதிமன்றம் கூறுவது போல, சட்டப்பிரிவு 370இன் கீழ் ஜம்மு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அரசியல் சாசன பாதுகாப்பு என்பது “சமச்சீரற்ற கூட்டாட்சி” என்பதோடு சம்பந்தப்பட்ட விசயம் மட்டுமல்ல; ஆனால் இந்தியாவுடன் அந்த மாநிலம் ஒன்றிணைந்த குறிப்பான வரலாற்றில் வேர் கொண்டுள்ளது.

இந்திய ஒன்றியத்தில் அரசியல் சாசன சட்டப்பிரிவு 370 ஐ ஒத்த சில சிறப்பு ஏற்பாடுகளை தொடர்ந்து அனுபவிக்கும் பல்வேறு பிற மாநிலங் களும் உள்ளன. துரதிர்ஷ்டவசமாக "சமச்சீரற்ற கூட்டாட்சி" என்பதாக ஜம்மு காஷ்மீரை மட்டும் உச்ச நீதிமன்றம் தனியாக குறிவைத்துள்ளது. மேலும் சமச்சீரற்றதாக தோன்றுவதை சரிசெய்வது என்னும் பெயரில் ஜம்மு காஷ்மீரின் மாநில அந்தஸ்தையே பறித்துக் கொண்டு அதனை இரண்டு ஒன்றியப் பகுதிகளாக (யூனியன் பிரதேசங்கள்) தகுதி இறக்கம் செய்த ஒன்றிய அரசாங்கத்தின் செயலையும் பொருட்படுத்தாமல் விட்டு விட்டது.

ஜம்மு காஷ்மீரின் மக்கள் தங்களது மாநில அந்தஸ்தையும் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றத் தின் மூலமாக பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கான உரிமையையும் இழந்து ஏற்கனவே நான்கு ஆண்டுகளுக்கும் மேலாகி விட்டது. இந்த செயலின் அரசியல் சாசன சரி(யற்ற)த் தன்மை பிரச்சினையி லிருந்து உச்ச நீதிமன்றம் நழுவிக்கொண்டு, மாநில அந்தஸ்தை திரும்ப வழங்குவது, சட்டமன்ற தேர்தல் களை நடத்துவது என்ற ஒன்றிய அரசாங்கத்தின் வாய்மொழி உத்தரவாதத்தை ஏற்றுக்கொண்டு அதனை தப்பிக்க விட்டுவிட்டது துரதிர்ஷ்டவச மானதாகும்.

காஷ்மீர் பள்ளத்தாக்கில் அரசியல் எதிர்ப்பையும் அடிப்படை உரிமைகளையும் ஒடுக்குதல், ஏற்கனவே நாடு முழுவதும் ஜனநாயகத்தை மறுப்பதற்கான வார்ப்புருவாகிவிட்டது. ஜம்மு காஷ்மீர் தொடர்பாக ஒன்றிய அரசாங்கம் செய்யத் தவறியதற்கும் தவறாக செய்ததற்கும் கிடைத்த உச்ச நீதிமன்றத்தின் ஒப்புதல், இந்தியாவில் கூட்டாட்சியை மேலும் கீழ்மைப்படுத்தி சிதைப்பதற்கான வாய்ப்பாக மோடி அரசாங்கத்திற்கு துணிவை வழங்கும். ❑

# மக்களவை உறுப்பினர் மஹுவா மொய்த்ராவின் நீக்கம், எதிர்ப்புக் குரல்களை மவுனமாக்கும் மோடி அரசாட்சியின் வெட்கக்கேடான செயலாகும்

வெள்ளிக்கிழமையன்று மக்களவையிலிருந்து திரிணாமுல் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹுவா மொய்த்ராவை நீக்கியிருப்பதன் மூலம் அதானியுடைய மிகப்பெரிய கார்ப்பரேட் மோசடியை அல்லது கார்ப்பரேட் போட்டிகளாலும் நேர்மையற்ற அரசியல் வழிமுறைகளாலும் உந்தப்படும் மோடி அதானி கூட்டை கேள்விக்குட்படுத்தும் எந்தவொரு முயற்சியையும் சட்டப்பூர்வமற்றதாக்க மோடிஷா அரசாட்சி எந்தவொரு எல்லைக்கும் செல்லும் என தெளிவாக்குகிறது.

குற்றம் சாட்டப்பட்டது முதல் விசாரணையும், பின்னர் நீக்கப்பட்டது வரையிலும் நெறிமுறைகள் கமிட்டியின் இந்த ஒட்டுமொத்த செயல்முறையும் நாடாளுமன்ற விதிமுறைகளையும் பாரபட்சமற்ற நீதி வழங்கும் இயக்கப்போக்கையும் முற்றிலும் மதிக்காமல் நாசமாக்கியுள்ளது.

நாடாளுமன்றத்தில் மோடி அதானி கூட்டை அம்பலமாக்கும் ஆற்றல்மிக்க உரைவீச்சுக்கு பெயர்பெற்ற மஹுவா மொய்த்ராவுக்கு எதிரான குற்றச்சாட்டு என்பது ஜார்க்கண்ட் மாநில கட்டாவின்

நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றத்தில் தரக்குறைவான, பெண்களை இழிவுபடுத்தக்கூடிய மொழியை பயன்படுத்துவதில் தொடர்ந்து குற்ற மிழைக்கும் நிசிகாந்த் தூபே கொடுத்த ஆதாரமற்ற புகாரின் அடிப்படையிலானதாகும். அவருடைய குற்றச்சாட்டு உடனடியாக மக்களவையின் நெறிமுறைகள் கமிட்டிக்கு சபாநாயகரால் அனுப்பி வைக்கப்பட்டது.

துபாயைத் தலைமையகமாகக் கொண்ட ஹிரநந்தனி குழுமத்தின் முதன்மை செயல் அதிகாரி தர்சன் ஹிரநந்தனியால் கையெழுத்திடப்பட்டு, சந்தேகத்திற்கிடமான 'வாக்குமூலப்பத்திரம்' ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது. அதில் அவர் திரிணாமுல் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹுவா மொய்த்ராவுக்கு லஞ்சம் கொடுத்ததாகவும் அதற்கு கைமாறாக கேள்விகளை சமர்ப்பிக்க மஹுவா மொய்த்ரா அவரது நாடாளுமன்ற கணக்கையும் அதன் கடவுச் சொல்லையும் தன்னிடம் கொடுத்த தாகவும் ஒப்புக் கொண்டுள்ளார். இதுவே மஹுவா மொய்த்ராவுக்கு எதிரான குற்றச் சாட்டாகும். வாக்குமூலப்பத்திரத்தை தொடர்ந்து தூபேயின் குற்றச்சாட்டுகளுக்கு எதிர்வினையாக ஹிரநந்தனி குழுமத்தால் தொடக்கத்தில் மறுப்பு வெளியிடப் பட்டது.

நெறிமுறைகள் கமிட்டி இந்தக் குற்றச்சாட்டு களை மேலோட்டமாகவே மதிப்பிட்டு தர்சன் ஹிரநந்தனியை நேரடியாக அழைத்து குறுக்கு விசாரணை செய்யவோ அல்லது வாக்குமூலப் பத்திரத்தில் உள்ள தகவல்களை சரிபார்க்கவோ மறுத்து விட்டது. மேலும் அந்தக் கமிட்டியால் மஹுவா மொய்த்ராவுக்கு நியாயமான விசாரணை யும் மறுக்கப்பட்டது. அந்த விசாரணையிலும் பாஜக உறுப்பினர்கள் திரிணாமுல் காங்கிரசின் நாடாளு மன்ற உறுப்பினருக்கு தொல்லையையும் அவர் பெயருக்கு களங்கம் ஏற்படுத்துவதையும் செய்தனர்.


மோடியையும் அவரது கார்ப்பரேட் கூட்டாளி களையும் பாதுகாப்பதற்கு, மஹுவா மொய்த்ராவை குற்றவாளியாக்கி அவரை நீக்குவதற்கு நெறி முறைகள் கமிட்டியின் 'முடிவை' பாஜக ஏற்கனவே தீர்மானித்து விட்டது என்பது, எந்தவொரு கலந்துரை யாடலும் இன்றி வரைவு அறிக்கையை ஏற்றுக் கொண்டதன் மூலம் தெளிவாகிறது.

மக்களவையிலிருந்து ராகுல் காந்தியின் நீக்கம், சஞ்சய் சிங்கின் கைது, நாடாளுமன்றத்திற்குள் டேனிஷ் அலி மீதான மதவெறி தாக்குதல் என நாடாளுமன்றத்தின் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக பாஜகவின் பழிவாங்கும் நீண்ட பட்டியலில் மஹுவாவின் நீக்கமும் சேர்ந்துள்ளது. மஹுவா மொய்த்ராவின் நீக்கத்தை உறுதி செய்ய பாஜக கொஞ்சமும் நேரத்தை வீணாக்காத அதேவேளையில் நாடாளுமன்றத்திற்குள் பகுஜன் சமாஜ் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டேனிஷ் அலி மீது வெறுப்புணர்வுமிக்க மதவெறி தாக்குதல் தொடுத்த பாஜக நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பிதுரி எந்தவொரு தண்டனையுமின்றி சுதந்திரமாக உலாவுகிறார்.

மஹுவா மொய்த்ராவின் நீக்கத்தை இககமாலெ வன்மையாக கண்டிக்கிறது. அவரை உடனடியாக மக்களவை உறுப்பினர் பதவியில் மீண்டும் அமர்த்த வேண்டுமெனவும் கோருகிறது. ❑

**தமிழாக்கம் - செந்தில்**

## தூத்துக்குடியில் பட்டியல் இன மக்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்



தூத்துக்குடியில் *3.12.2023* அன்று பட்டியல் இன மக்கள் மீதான தாக்குதலைக் கண்டித்து இகக(மாலெ) மாநிலக்குழு உறுப்பினர் சகாயம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாலெ தீப்பொறி ஆசிரியர் ஜி.ரமேஷ், இகக(மாலெ) மாநில நிலைக்குழு உறுப்பினர் அந்தோணிமுத்து, திருநெல்வேலி மாவட்டச் செயலாளர் எம்.சுந்தர்ராஜ், தூத்துக்குடி மாவட்டப் பொறுப்பாளர் முருகன் ஆகியோர் கண்டன உரையாற்றினர். மாநிலக்குழு உறுப்பினர்கள் சுசீலா, கார்மல் மற்றும் சிவராமன், சண்முகப் பெருமாள், விக்ரம் வேலு, ராமு உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தோழர் வசந்தி நன்றி கூறினார். ❑

# நாடாளுமன்ற தாக்குதலின் 22 வது நினைவு நாளில் நாடாளுமன்றத்தில் புகைப் புட்டிகள்

**திபங்கர்**

**டி**சம்பர் *13, 2001* அன்று இந்திய நாடாளு மன்றத்தின் மீது நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்கு தலின் இருபத்திரண்டாவது நினைவு நாளில், புதிய நாடாளுமன்ற கட்டிடம் அதிர்ச்சி தரும் புகை பீதிக்கு சாட்சியமாகியது. சாகர் சர்மா என அடையாளம் காணப்பட்ட லக்னோ இளைஞர் பார்வையாளர்கள் மாடத்திலிருந்து திடீரென குதித்து, மேஜைகள் மீது தாவிச்சென்று மஞ்சள் புகையை வெளியேற்றும் புட்டியைத் திறந்தார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவரை பிடித்து காவலர்களிடம் ஒப்படைக்கும் முன்பு, ஜீரோ நேரம் நடந்து கொண்டிருக்கும் போதே அவர் இதனைத் செய்தார். சாகருடன் மைசூரின் மனோரஞ்சன் என்ற கூட்டாளியும் இருந்தார். பார்வையாளர்கள் மாடத்தில் அமர்ந்தபடியே அவரும் மற்றொரு புகைப் புட்டியைத் திறந்து மஞ்சள் புகையைப் பரவச் செய்தார்.

சில நிமிடங்களுக்கு முன்னதாக, ஹரியானா, ஹிசாரின் நீலம் தேவி, மஹாராஷ்டிரா, லத்தூரின் அமோல் ஷிண்டே ஆகிய வேறு இரு இளைஞர்கள் நாடாளுமன்ற கட்டிடத்திற்கு வெளியே சிவப்பு, மஞ்சள் வண்ணப் புகைப் புட்டிகளை வெடிக்கச் செய்து, வேலையின்மை, பெண்கள் மீதான கொடுமைகளுக்கு எதிராகவும் தாய்நாட்டை புகழ்ந்தும் சர்வாதிகாரத்தை கண்டித்தும் முழக்க மிட்டனர். இந்தப் புகைப் புட்டி நிகழ்வில் அவரது குர்கான் வீட்டில் இந்தக் குழுவினருக்கு அடைக்கலம் கொடுத்த லலித் ஜா, அதே குர்கானைச் சேர்ந்த விக்கி சர்மா என்ற மேலும் இருவரும் சம்பந்தப்பட்டுள்ளனர். மனோரஞ்சனும் சாகர் சர்மாவும் *2014* லிலிருந்து மைசூரின் பாஜக நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் பிரதாப் சிம்ஹாவின் பரிந்துரையின் கீழ் பார்வையாளர் நுழைவு அட்டையை பெற்றுள்ளனர். பொறியியல் பட்டதாரியாக அறியப்படும் மனோ ரஞ்சன் அவரது குடும்ப விவசாயத்தில் தந்தைக்கு உதவியாக இருந்துள்ளார். நீலம், ஹரியானா மாநில சிவில் சேவைகளுக்கான தேர்வுக்கு படித்துக் கொண்டிருந்தவர் எனத் தெரிகிறது.

மேலோட்டமாகப் பார்க்கும் போது, பகத்சிங், பட்டுகேஷ்வர் தத் ஆகியோரால் *1929* ஏப்ரல் *8* அன்று நிகழ்த்தப்பட்ட வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த மத்திய சட்டமன்ற குண்டு வீசுதலை நினைவுபடுத்தும் வகையில் இந்த புகைப் புட்டி நிகழ்வு வடிவமைக் கப்பட்டது போல் தெரிகிறது. பிரிட்டிஷாரின் ஆட்சியில் நிகழ்த்தப்பட்ட அநீதிகள் குறித்து மக்களின் கவனத்தை ஈர்க்க விரும்பிய பகத்சிங், பட்டுகேஷ்வர் தத் போல நீலம், மனோரஞ்சன், அவர்களது கூட்டாளிகள் இன்றைய இந்தியாவில் தீவிரமாகி வரும் வேலையின்மைக்கு எதிராக எதிர்ப்பு தெரிவிக்க முயற்சித்துள்ளது போல இந்நிகழ்வு வெளிப்படுகிறது. ஆனால், எதிர்ப்பாளர்கள் தங்களது கருத்துகளை வெளிப்படுத்த நாடாளு மன்றத்தின் மீதான பயங்கரவாத தாக்குதலின் நினைவு நாளை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

என்னவாகிலும் இந்த புகை பீதி நாடாளுமன்றத் தின் பாதுகாப்பில் உள்ள பெரும் இடைவெளியை அம்பலப்படுத்தியுள்ளது. புதிய நாடாளுமன்ற கட்டிடத்தின் கடுமையான பாதுகாப்பு அமைப்புகள் குறித்து அதிகளவு பேசப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டால் புகைப் புட்டிகள் இந்தக் கட்டிடத்திற்குள் எவ்வாறு கொண்டு செல்லப் பட்டது என்பது, தவிர்க்கவியலாமல் மிகுந்த முக்கியத்துவம் மிக்க கேள்விகளை எழுப்புகிறது. பாதுகாப்பை மீறி உள்ளே சென்ற சாகரும் மனோ ரஞ்சனும் எவ்வித தீங்கையும் மேற்கொள்ளும் எண்ணம் கொண்டிருக்கவில்லை என்பதும் தங்களது கருத்துகளை வெளிப்படுத்த வண்ணப் புகைகளை மட்டுமே கொண்டு சென்றுள்ளனர் என்பதும் பெரும் நிம்மதி தருகிற செய்தியாகும். மோடியின் செல்ல ஊடகங்களுக்கு இந்தப் புகைப் புட்டி நிகழ்வு பரபரப்பு செய்திகளை வெளியிடும் போட்டியில் ஈடுபடுவதற்கான மற்றொரு நிகழ்வாக ஆனது. செய்தியாளர்கள் அந்த புகைப் புட்டியை பரப்புரை போரின் வெற்றிச் சின்னமாக கருதி அதனை கைப்பற்ற உண்மையில் தங்களுக்குள்ளேயே முட்டி மோதிக் கொண்டனர்.

ஏதாவதொரு எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பி னரின் பரிந்துரையைப் பயன்படுத்தி அந்த பார்வை யாளர் நுழைவு அட்டை பெறப்பட்டிருந்தாலோ அல்லது அந்த அறுவர் குழுவில் ஏதோ ஒரு முஸ்லிம் பெயர் இருந்திருந்தாலோ ஊடகத்தின் எதிர்வினை எப்படி இருந்திருக்கும் என்பதை கற்பனை செய்வ தொன்றும் நமக்கு கடினமானதல்ல. நிச்சயமாக,

இதுவொரு பெரும் பயங்கரவாத சதி எனவும் ஹமாஸால் நிகழ்த்தப்பட்ட 'ஜிஹாத்' என்பதாகக் கூட இருக்கலாம் எனவும் கண்டுபிடிப்பதில் ஊடகங் கள் கொஞ்சமும் நேரத்தை வீணடித்திருக்காது. இப்போதும் கூட இந்தப் புகைப் புட்டி நிகழ்வை பயன்படுத்தி விவசாயிகள் இயக்கத்தின் மீது அவப் பெயர் உண்டாக்க ஊடகங்களும் பாஜக தகவல் தொழில்நுட்பப் பிரிவும் ஒருங்கிணைந்த பரப்புரை இயக்கம் மேற்கொள்வதை தற்போது நாம் காண்கிறோம்.

இந்த ஒட்டுமொத்த நிகழ்வு மற்றும் அது எழுப்பியுள்ள கேள்விகள் குறித்து மோடி அரசாங்கம் மக்களுக்கு உடனடியாக விளக்கம் அளிக்க நிச்சயமாகக் கடமைப்பட்டுள்ளது. ஒரு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் தன்னுடைய நாடாளு மன்ற கணக்கைப் பகிர்ந்து கொண்டதன் மூலம் நாட்டின் பாதுகாப்புக்கு குந்தகம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டு நீக்கப்பட்டிருக்கிறார். நெறி முறைகள் கமிட்டியின் நிகழ்வுகளைப் பொது வெளியில் விமர்சித்ததற்காக மற்றொரு நாடாளு மன்ற உறுப்பினர் கடிந்துரைக்கப்பட்டார். தற்போது மக்களவைக்குள்ளேயே புகை பீதிக்கு காரணமான பார்வையாளர்களின் நுழைவுக்கு பாஜக நாடாளு மன்ற உறுப்பினரே பரிந்துரை செய்திருக்கும் போது அவர் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும்?

ரைக்ஸ்டேக் தீ விபத்து எவ்வாறு ஹிட்லரின் ஆட்சியை வலுப்படுத்தவும் நாஜி ஜெர்மனியின் பேரச்சத்தை கட்டவிழ்த்து விடவும் அவரால் பயன் படுத்தப்பட்டது என வரலாறு நமக்குக் கூறுகிறது. அந்த ரைக்ஸ்டேக் தீ விபத்து கம்யூனிஸ்ட் போராட்டக்காரர்கள் மீது பழி சுமத்த அரசாங்கத்தால் திட்டமிட்டு ஏற்பாடு செய்யப்பட்டு, பின்னாளில் அம்பலப்படுத்தப்பட்ட ஏமாற்று வேலையாகும். அதன் தொடர்ச்சியாக கம்யூனிஸ்டுகளும் தொழிற் சங்கவாதிகளும் பெருமளவுக்கு கைது செய்யப் பட்டனர். இந்த புகைப் புட்டி நிகழ்வும் இதே போன்று இந்தியாவில் மக்கள் போராட்ட இயக்கங்களை மேலும் நசுக்க பயன்படுத்தப்படாத வண்ணம் ஜனநாயக இந்தியா கண்டிப்பாக உறுதி செய்ய வேண்டும்.

**தமிழாக்கம் – செந்தில்**

# அகில இந்திய தொழிற்சங்க மையம் AICCTU
# தமிழ்நாடு 10 ஆவது மாநில மாநாடு
### 2023 டிசம்பர் 16, 17 – கரூர்

அகில இந்திய தொழிற்சங்க மையக் கவுன்சில் (ஏஐசிசிடியு), தமிழ்நாடு 10ஆவது மாநில மாநாடு 2023 டிசம்பர் 16–17 தேதிகளில் கரூர், பசுபதி பாளையம், டி.பி.மகாலில் தோழர்.என்.கே.நடராஜன் நினைவரங்கத்தில், தோழர் சுகுந்தன் நினைவு மேடையில் நடைபெற்றது. மாநாட்டுக் கொடியை ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் தோழர் திருநாவுக்கரசு ஏற்றினார். தொடர்ந்து தியாகிகள் நினைவுத் தூணிற்கு தலைவர்கள் அஞ்சலி செலுத்தினார்கள். முதல் நாள் நடைபெற்ற பொது அமர்விற்கு ஏஐசிசிடியு மாநிலத் தலைவர் தோழர் த.சங்கர பாண்டியன் தலைமை தாங்கினார். ஏஐசிசிடியு மாநிலப் பொதுச் செயலாளர் தோழர் கே.ஞான தேசிகன் அஞ்சலித் தீர்மானத்தை முன்வைத்தார். ஏஐசிசிடியு மாநிலத் துணைத் தலைவர் தோழர் பால்ராஜ் வரவேற்புரையாற்றினார். ஏஐசிசிடியு அகில இந்திய தலைவர் தோழர் வீ.சங்கர், பொதுச் செயலாளர் தோழர் ராஜுவ்டிமரி சிறப்புரையாற்றி னார்கள். மேலும் தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவை துணைச் செயலாளர் தோழர் சு.பாண்டியன், ஏஐடியுசி மாநிலத் தலைவர் தோழர் எஸ்.காசிவிஸ்வ நாதன், சிஐடியு மாநில உதவிப் பொதுச் செயலாளர் தோழர் வி.குமார், ஹெச்எம்எஸ் மாநிலத் தலைவர் திரு மு.சுப்பிரமணியன் ஏஐயூடியுசி மாநிலக் குழு உறுப்பினர் தோழர் சாய்குமார், உழைக்கும் மக்கள் மாமன்ற தொழிற்சங்க துணைத் தலைவர் தோழர் சம்பத், தொழிலாளர் விடுதலை முன்னணி மாநில அமைப்பாளர் தோழர் பேரறிவாளன், ஐஎன்டியுசி கரூர் மாவட்ட கௌரவத் தலைவர் திரு. பேங்க் சுப்ரமணியன், விவசாயிகள் போராட்ட முன்னணி யின் மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பாலகிருஷ் ணன் ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார்கள். ஏஐசிசிடியு மாநிலச் செயலாளர் தோழர் கே.பாலசுப்பிரமணியன் தீர்மானங்களை முன்வைத்தார். மாநிலச் செயலாளர் தோழர் வேல்முருகன் நன்றி கூறினார். 16ம் தேதி மதிய உணவிற்குப் பின்னர் பிரதிநிதிகள் மாநாடு துவங்கியது. தோழர்கள் இரணியப்பன், பாலசுப்பிர மணியன், பால்ராஜ், கிருஷ்ணவேணி, வேல்முருகன், முத்து, மதியழகன் ஆகிய தலைமைக்குழு தோழர்கள்

மாநாட்டை நடத்தினார்கள். தோழர்கள் வேல் முருகன், வெங்கடாச்சலம், கணேசன் ஆகியோர் உதவிக்குழுவாகச் செயல்பட்டனர்.

மாநாட்டு அறிக்கையை ஏஐசிசிடியு பொதுச் செயலாளர் தோழர் க.ஞானதேசிகன் முன் வைத்தார். அதனைத் தொடர்ந்து பிரதிகள் தங்கள் கருத்துக் களை முன்வைத்தார்கள். டிசம்பர் 17 அன்றும் பிரதிநிதிகள் தங்கள் கருத்துக்களை முன் வைத்தனர். அதனைத் தொடர்ந்து அறிக்கை ஏக மனதாக ஏற்றுக் கொள்ளப் பட்டது. மாநாட்டில் அனைத்திந்திய விவசாய, கிராமப்புறத் தொழிலாளர் சங்க மாநிலத் தலைவர் தோழர் பாலசுந்தரம், அகில இந்திய விவசாயிகள் மகாசபை மாநிலப் பொதுச் செயலாளர் அ.சந்திரமோகன், நீதிக்கான மக்கள் இயக்கப் பொறுப்பாளர் தோழர் அ.சிம்சன், அகில இந்திய முற்போக்குப் பெண்கள் கழக மாநிலக்குழு உறுப்பினர் தேன்மொழி, புரட்சிகர இளைஞர் கழக மாநிலப் பொதுச் செயலாளர் தனவேல், அகில இந்திய மாணவர் கழக மாநிலக்குழு உறுப்பினர் பாண்டித் துரை, அகில இந்திய கட்டுமான தொழிலாளர் கூட்டமைப்பின் தேசியத் தலைவர் சோ.பாலசுப்பிர மணியன் வாழ்த்துரை வழங்கினார்கள். மத்திய பார்வையாளர் தோழர் உதய் கிரண், புதிய பொதுக்குழு, செயற்குழு, நிர்வாகக் குழுவிற்கான தேர்தலை நடத்தினார். 105 பேர் கொண்ட பொதுக்குழு தேர்வு செய்யப்பட்டது. அதில் 45 தோழர்கள் செயற்குழுவிற்குத் தேர்வு செய்யப் பட்டனர். அதில் 19 தோழர்கள் ஏஐசிசிடியு மாநில நிர்வாகிகளாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

தலைவராக தோழர் த.சங்கரபாண்டியன், சிறப்புத் தலைவராக தோழர் சொ.இரணியப்பன், பொதுச் செயலாளராக தோழர் க.ஞானதேசிகன், துணைத் தலைவர்களாக தோழர்கள் க.பாலசுப்பிர மணியன், ஜி.ரமேஷ், எஸ்.எம்.அந்தோணிமுத்து, சுசீலா, கோ.கோவிந்தராஜ், பால்ராஜ், சதீஸ், மதிய ழகன் ஆகியோரும் செயலாளர்களாக தோழர்கள் திருநாவுக்கரசு, வேல்முருகன்(சேலம்), அதியமான், வெங்கடாச்சலம், முருகன் (மி.வா), முத்து, சிவா கிருஷ்ணவேணி(நிதி) ஆகியோர் தேர்வு செய்யப் பட்டனர். ஏஐசிசிடியு தேசியத் தலைவர் தோழர் வீ.சங்கர் நிறைவுரையாற்றினார். காவிப் பாசிச மோடி அரசை வீழ்த்திடுவோம் என்கிற முழக்கங்களுடன் மாநாடு நிறைவு பெற்றது. மாநாட்டில்,

- கார்ப்பரேட் ஆதரவு தொழிலாளர்கள், விவசாயிகள் விரோத ஒன்றிய மோடி ஆட்சியை 2024




தேர்தலில் தோற்கடிப்போம்!

- ஒன்றிய மோடி அரசின் தொழிலாளர் விரோத 4 சட்டத்தொகுப்புகளை போராடி முறியடிக்க மாநாடு உறுதி ஏற்றுக் கொள்கிறது. மத்திய தொழிற் சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் இணைந்து நடத்த உள்ள நாடு தழுவிய பிரச்சார இயக்கத்தை பெரும் வெற்றியடையச் செய்ய அனைத்து வகையிலும் பாடுபடுவோம்!

- நாடாளுமன்ற புதிய கட்டிடத்திற்குள் புகுந்து கண்ணீர்ப் புகையை திறந்து விட்ட நிகழ்வு வெறும் பாதுகாப்புக் குறைபாடு மட்டுமின்றி, பாஜகவினரால் மிகவும் திட்டமிட்டு நடத்தப்பட்ட செயல் ஆகும். இச்சம்பவம் தொடர்பாகக் கேள்வி எழுப்பிய தமிழக எம்பிக்கள் உட்பட 14 நாடாளுமன்ற உறுப்பினர்களை இடைநீக்கம் செய்திருக்கிற ஒன்றிய மோடி அரசின் ஜனநாயக விரோத செயலை மாநாடு வன்மையாக கண்டிக்கிறது.

- அனைத்து உழைக்கும் மக்களுக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களுடன் குறைந்தபட்ச மாத ஊதியம் ரூபாய் 36,000 பெற்றிட போராட மாநாடு உறுதியேற்கிறது.

- முப்பெரும் குற்றவியல் சட்டங்களை மக்களுக்கு விரோதமாகவும் இந்தியில் பெயரிட்டும் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதை தமிழ்நாட்டு மக்கள் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என மாநாடு உறுதிப்பட கூறுகிறது. அரசியல் சாசன சட்டத்துக்கு எதிரான இந்த நடவடிக்கையை ஒன்றிய மோடி அரசு கைவிட வேண்டும் என மாநாடு கோரிக்கை விடுக்கிறது.

- ரயில்வே பணிமனை, நெய்வேலி நிலக்கரி சுரங்கம், பாரத மிகுமின் நிலையம் ஆகிய மத்திய அரசு மற்றும் மத்திய அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் 80% வேலைவாய்ப்புகள் தமிழர் களுக்கே வழங்கப்பட வேண்டும் என மாநாடு கோருகிறது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன. ❑



வீழ்க பாசிசம்!
வெல்க இந்தியா!!
தஞ்சையில்...
பிப்ரவரி 1 2024
பாசிச எதிர்ப்பு பேரணி
2024-ல் பாசிச பிஜேபி
மோடி ஆட்சியை
வெளியேற்றுவோம்!
இந்தியா கூட்டணி தலைவர்கள் பங்கேற்கும்...
மாபெரும் பொதுக்கூட்டம்
01.02.2024 வியாழன் மாலை 3 மணி
TCMC மைதானம், பழைய பேருந்து நிலையம் அருகில், தஞ்சாவூர்.
சிறப்புரை: தோழர். திபங்கர்
பொதுச்செயலாளர், CPIML
சிபிஐ-எம்எல், தமிழ்நாடு
தலைமை அலுவலகம்: 3/254 பி. ஜீவா தெரு. வண்டலூர். சென்னை-48.செல்: 9443507067

MALAE THEEPORI. Registered with Registrar of NewsPaper for India TN/TAM/2002/12013
Posted on 20.12.2023 at Egmore RMS/1 Patrika Channel Regn No:TN/CCN/368/2021-2023
Published on 1st and 16th of every month R.DIS: 2804/17 Licensed to Post WPP TN/PMG/(CCR)/WPP-436/2021-2023

# ஏஐசிசிடியு-தமிழ்நாடு 10வது மாநில மாநாடு

## கரூர் - 16,17.12.2023


















Owned and Published bys; S.Balasundaram from 1/10, 11th street, Karunanidhi Nagar, Ayanavaram, Chennai - 600023
Printed by R.Murugan at Print Point, 10, Pulipone Bazar 2nd Lane, Triplicane, Chennai - 600005. Editor G.Ramesh